578 78

REGD No. M 3438

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கச. } திட்டை. விசு—சித்திரை 1941——மே 1உ { திங்கள் கூ.

எண்.	உள்ளுறை.	பக்கம்.
1.	மதிப்புரை மஞ்சரி ...	201
2.	வரவேற்பு வாழ்த்து ...	203
3.	வேளாளரும் சைவமும் ...	205
4.	சைவ சமய விளக்கம் ...	210
5.	மணிவாசக சங்க அறிக்கைப்பத்திரம் ...	213
6.	பெண்ணினல்லார்	(33—40)

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

செய்தித்திரட்டு.

உள்ளூர்:— சிவாலயத்தில் பங்குனி ௨௮ௗ உத்தரநாள் வைத்திய லிங்கம் பிள்ளை குமாரர்களாலும், இம்மதி ௧௬ௗ பரணிநாள் வைத்தியம், க. வீரப்பிள்ளை வகையாராலும் திருமஞ்சன திருவாராதனைகள் செய்யப் பெற்றன.

சித்தாந்த வித்தியாசாலை மண்டபத்தில் மணிவாசக சங்கத்தின் முப்பத்தொராவதாண்டு விழா திருவாளர் சாமி, வேலாயுதம் பிள்ளை B. A., L. T., அவர்கள் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

சிவாலயத்திருப்பணி பங்குனி ௨௧ௗ குடவறைக் குறட்டிற்குக் கண்டவரி முகூர்த்தம்செய்து அதுவும், சுவாமிகோவில் திருமதிலுத்திரங் களும் தீர்மானம் சேர்மானம் ஆகியவேலைகள் நடைபெறுகின்றன.

காந்தைக்கருவூலநாதசுவாமிதிருவிழா வைகாசி மாதம் வழக்கம்போல் நடைபெறும். வைகாசி ௨௭ௗ ஏழூர்ச்சுற்றுவிழாக் கொண்டுஇத்திருத்தலத் திற்கு எழுந்தருளுவர்.

பலவான்குடி:— குமாரவிநாயகர் திருக்கோயில் திருவாசகபாடசாலை ஆகியன ராம. கு. பொதுக்குடும்ப அறநிலையங்களாகும். அவ்வற நிலயங் களின் பணங்களையும் வரவு செலவு கணக்குகளையும் மூவகையாரும் ஒப்பு வித்து நடைபெறவேண்டிய முறைகளைத் திட்டஞ்செய்து கொள்ள வேண்டுமென்பதும் பிறவும் கண்டு இராமசாமி செட்டியார் எழுத்துமூலம் கொடுத்த அறிவிப்பை இளையபெருமாள் செட்டியாரும், சு. குமரப்ப செட்டியாரும் விக்கிரம பங்குனி ௩௦ௗ பெற்றுக்கொண்டு விசு வருடப் பிறப்பன்று இளையபெருமாள் செட்டியார், சு. குமரப்ப செட்டியாரைத் துணைக்கொண்டு பூட்டுகளுக்கு வேறு சாவிபோட்டுத்திறந்து ஆங்குள்ள வைகளைப் கைப்பற்றிக்கொண்டனர்.

திருத்தம்:— சிவநேசன் 14-வது ஆண்டு 163-வது பக்கம் 2-3-வது வரிகளில் "அவர்களின் பொருந்தாச் செயல்கள் ஒழியுங்கால" மென்பதை "அவர்கபொழியுங்காலம்" என்று திருத்திக்கொள்ளுமாறு அக்கட்டுரை யாளர் தெரிவிக்கின்றனர்.

தஞ்சை:— திரு. மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில் சைவ சித்தாந்த சபையின் 11-வது ஆண்டு விழா தமிழ்சேவள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்களின் சீரிய தலைமையில் பேரறிஞர்களின் விரிவுரைகளுடன் பங்குனி ௨௪ௗ இனிது நிறைவேறியது.

வைகாசி ௨௮ௗ திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் குருபூசையும் முத்துப்பல்லக்குக் காட்சியும் மிகச் சிறப்புடன் நடைபெறும்.

மதுரை:—தமிழபிவிருத்திசங்க ஆண்டு நிறைவுவிழா பங்குனி ௨௧ௗ மேலைச்சித்திரைவீதி அன்னக்குழி மண்டபத்தில் திரு, முனகாலபட்டாபி ராமையாஅவர்கள் தலைமையில் திரு, N. R. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களின் 'கம்பன் கவி' என்னும் விரிவுரையுடன் கம்பர் திருநாள் கொண்டாடி நிறைவேறியது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு கசு.	விசு - சித்திரை 1941—மே—1உ	திங்கள் கூ.

"உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே."

மதிப்புரை மஞ்சரி.

தோத்திரமாலை:—இது திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கத்தின் 7-வது வெளியீடு. திருமயிலை ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்களின் திருத்தேவியார் ஸ்ரீ அரங்கநாயகி அம்மாளின் விருப்பத்துக்கிணங்கத் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளது. இதனுள் நாலாயிரத்தின் விவரம், ஜெபக்கிரமாதிகள், திருப்பல்லாண்டு, திருப்பாவை, திருவாய்மொழி, அடைக்கலப்பத்து, பரமபத சோபானம், திருமந்திரச்சுருக்கு, த்வயச்சுருக்கு, சரமஸ்லோகச்சுருக்கு, பிரபந்தசாரம், கலம்பகம், பிள்ளையந்தாதி, திருத்திகழும் திருப்பாசுரங்கள், ஸ்தோத்திரரத்னம் ஆகிய ஆழ்வார்களின் அருட்செயல்களும், கோதாஸ்துதி கோபால விம்சதி ஸ்ரீஸ்துதி பகவத்தியான சோபானம் திருமகளந்தாதி ஆகிய வடமொழி நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பும் சேர்த்துத் தொகுத்துச் சீரேற திருமாலின் சிறப்பை விளக்கி நிற்பது போற்றத்தக்கது. திருப்பல்லாண்டை முதலிலும் திருமகளந்தாதியை யீற்றிலும் வைத்து நல்லமுறையில் திரட்டி வகைப்படுத்தி பந்தல்குடி பாரத்வாச மாடபூசி ரெ. திருமலை ஐயங்காரவர்களால் பதிப்பிக்கப்பெற்

...ளகா. ...பின் ராயல் 1-க்கு 16. அழுத்தமான காகிதம் 96 பக்கமுள்ளது. சுத்தப்பதிப்பு. நித்தியபாராயணஞ் செய்து திருவருள் பெறுதற்குரியது.

தருமையாதீன வெளியீடுகள்:— புள்ளிருக்கு வேளூர்த் தேவாரத் திருப்பதிகங்களும், திருப்புகழும், சிவஞான தேசிக சுவாமிகள் அருளிச்செய்த முத்துக்குமாரசுவாமி திருவருட் பாவும் சேர்த்து முகப்பில் 24-வது குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுருவ ஓவியத்துடன் 34-வது வெளியீடும்; ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத்தொகையும் சிவஞான தேசிக சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய அஜபா நடன பதிகமும் சேர்ந்த 35-வது வெளியீடும்; திரிபுவன தலமகிமைச் சுருக்க வெளியீடும்; ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரச் சுருக்கத்துடன் திருவாசகம்—கீர்த்தித்திருவகவல் வெளியீடும் இலவசமாக வழங்குகிறார்கள். சிவபக்தர்களுக்கு இவ்வெளியீடுகள் சிறந்தபயன் தருவனவாம்.

திருவேட்டக்குடி புராணவசனம்:— இது தில்லைவிடங்கன் வெண்பாப்புலி வேலுச்சாமி பிள்ளையவர்கள்பாடிய செய்யுள் நூலை திருநெல்வேலி பா. சிதம்பரநாத பிள்ளையவர்கள் உரைநடையாக எழுதி இத்திருத்தலத் திருப்பணிச்செல்வர் தேவகோட்டை ராம. மெ. இலக்குமணச் செட்டியாரவர்களின் நிழலோவியத்துடன் அவர்களின் மகன் மகன் திரு. மெ. லெ. ராம. இலக்குமணச் செட்டியாரவர்களால்பதித்துவெளியிடப்பெற்றது. தேவாரப்பதிகம் முதலியன கடவுள் வாழ்த்து இவைகளின் அருஞ்சொற் குறிப்புரைகளும் மற்றும் 7-படலங்களும் இத்தலத்தின் பெருமையைச் சிறப்பித்துத் திகழ்கின்றன.

விஷு வருஷ வாக்கிய பஞ்சாங்கம்:— யாழ்ப்பாணம் கொக்குவில் இரகுநாதையர் அவர்களின் மகன் மகன் திரு. இரகுநாதையரவர்களால் கணித்து சோதிடப் பிரகாசயந்திரசாலையில் அச-ஆம் வருடப்பதிப்பாகப் பதித்து வெளியிடப்பெற்றது. இதனுள் நூறுவகை விஷயங்கள் காணக்கிடக்கின்றன. திதி நட்சத்திரம் யோகம் கரணம் விரதாதி நிரூபணங்களை முறை பிறழாது விளக்குவது. எல்லா விஷயங்களையும் எளிதில் தெரிந்து கொள்ள உதவுவது. தொடர்ந்து எண்பத்து நான்கு ஆண்டுகளாக வெளியிட்டு வருதல்கொண்டே இதன் பெருமை மிகவுயர்ந்ததுடைய தென்பது தெளிவாம். இதன் விலை அணா 4.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தென்குடித் திட்டை

மணிவாசக சங்கத்தின் முப்பத்தோராவது ஆண்டு

விழாவின் அவைத் தலைவர்,

தஞ்சைமா நாட்டாண்மைக்கழக உயர்தரக் கல்லூரித்

தலைமையாசிரியர், செந்நெறிச் செல்வர்,

சாமி. வேலாயுதம் பிள்ளை B. A., L. T.,

அவர்கட்கு,

வரவேற்பு வாழ்த்து.

1. பொன்னிவள மெந்நாளுங் குன்றாத சோணாட்டிற்
பொருவில் தஞ்சை, யென்னுநக ரினில்வேளாண் குலத்துதித்துக்
கல்வியறி வொழுக்க மென்றும், நன்னரசனி கலமெனப்பூண்
டிறைசிவனே யாமடிமை யவற்கெஞ் ஞான்று, மென்னவகத்
துறுதிபல பிறப்பினிற்செய் புண்ணியத்தி னியன்ற கோவே!

2. புண்ணியவெண் ணீறணிந்து மணிபூண்டு பொலியவுடல்
பொருந்து நண்ணு, வெண்ணுறவைந் தெழுத்துநனி காமலர்க
டுய்த்தொழுது சிவனை யேத்திக், கண்ணீர்மல் குறக்காத
லுளங்கசியத் தொண்டாற்றிக் கருது மூவர், பண்ணுறுஞ்செந்
தமிழ்ப்பதிகம் பாடியுரு கிடுமடியார்ப் பத்தி பூண்டோய்!

3. பவநாம வாரிதியைக் கடப்பதற்கோர் புணைசிவன்றாட்
பற்றென்றென்றே, சிவனையவ னடியவரைச் சிவ[illegible]
யத்தைத் தினமும் பேணுஞ், சிவநெறியே [illegible]நெறியாக் கொண்
டொழுகுந் திருவாள! செம்மை யாள!, அவநெறியோர் பால
ணுகாச் சீர்வேலா யுதக்குரிசில்! அன்பர்க் கின்பே!

4. சீரா ருலக நாயகிபாற் றிகழும் பசுப திப்பெருமான், ...ர் வேற்கைக் குமரனுடன் குலவிச் சேர்தென் குடித் ...டை, யேரார் மணிவா சகசங்கத் தியலு முப்பத் தொரா ...வைப், பேரார் விழவின றனித்தலைமைப் பெரும! வேலா யுதவேளே!

5. திங்க ளுலவுஞ் சடைப்பெருமான் றிகழுங் கருணை யினிற்றிளைத்துப், பொங்கு மடியார் குழாநடுவுட் புகுந்து புகழைப் பேசிமிகச், சங்கந் தழைக்கத் தனித்தலைமை தாங்க வுளங்கொள் தகையாள!, எங்கள் சாமி நாதனரு ளெழில்சேர் வேலா யுத!வாழி.

6. புகலி வேந்தர் திருப்பதிகம் பொருந்துந் திருத்தென் குடித்திட்டை, யகமே மருவு மிச்சங்க மம்மை பாகன் றிரு வருளால், மிகவே வாழி கண்மணிசீர் வெண்ணி றுடனே யெழுத்தைந்தும், தகவே வாழி யடியார்கள் சாமி வேலா யுத!வாழி.

7. திருவா ருந்தென் குடித்திட்டைச் சித்தாந் தவித்யா சாலையுடன், அருள்சேர் நற்சண் முகநாம மதுகொள் சீர்ப்புத் ...சாலை, பொருள்தேர் மணிவா சகசங்கப் புனித விழாவிற் ...மைபெறும், மருள்தீர் வேலா யுதப்பெரியோன் வாழி வாழி வழிவழியே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தேன்குடித்திட்டை. ...சு—சித்திரை—கசுஉ 1—5—1941.	}	இங்ஙனம், தங்கள் அன்புள்ள, மணிவாசக சங்கத்தினர்.

உ

வேளாளரும் சைவமும்.

(சைவத்திருவாளர், ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள்.)

தமிழ் நாட்டிற் பரம்பரைச் சைவ வேளாளரென்றொரு சாதியினர் இருந்துவருகின்றனர். வேளாளரென்ற அளவிற் சுட்டப்படுபவர் அவரே. பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நான்கு சாதிகளுள் அவ்வேளாளர் எந்த வகையைச் சேர்ந்தவரென்பது ஒரு பெரிய ஆராய்ச்சி. ஒரு சாரார் அவரைத் தமிழ்நாட்டுயர் குலத்தினரென்று கூறி அந்நான்கனுள் ஒன்றினும் படாதவரென்பர். அவரை இன்னொரு சாரார் பிராமணரென்றும், பின்னொருசாரார் க்ஷத்திரியரென்றும், மற்றொரு சாரார் வைசியரென்றும், வேறொருசாரார் சூத்திரரென்றுஞ் சொல்வர். பண்டிதர் கூடி ஆலோசித்துத் தீர்க்கவேண்டிய அவ்விஷயம் ஒருபுறமிருக்கட்டும். அவ்வேளாளரைப் பிராமணரென்றோ க்ஷத்திரியரென்றோ வைசியரென்றோ யாம்சொல்லுவதாயிருந்தால் அது இப்போது பிராமணரென்றும் க்ஷத்திரியரென்றும் வைசியரென்றுந் தம்மைச் சொல்லிக்கொண்டிருக்குஞ்சிலபல கூட்டத்தினருக்கு விருப்பந் தாராமலிருக்கலாம். ஆனால் அவரைச்சூத்திரரென்று சொல்லிவிட்டால் அம்முக்கூட்டத்தினரும் விசிராந்தியடைவர். சூத்திரரென்று வேறுஞ் சிலசாதியினரிருந்தால் அவரும் வேளாளர் தம்மைச் சூத்திரரென்று சொல்லிக்கொள்வதனால் அடையும் நஷ்டம் ஒன்றுமிராது. ஆகையால் இந்தக் கட்டுரையளவில் யாம் அவரைச் சூத்திரரென்றே கொள்கிறோம்.

ஆனால் மேன்மேற் சாதியார்க்குக் கீழ்க் கீழ்ச் சாதியார் அடியராக வேண்டுமென்று விதியிருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் வேளாளர் அடிமைகளா என்றோரையம்நிகழலாம். அடிமைத்திறம் அவமானஸ்பதமே. அது க்ஷத்திரிய வைசிய சாதியினருக்குங்கூட வுண்டு. சூத்திரர்மாத்திரம் தம் அடிமைத் திறத்துக்குக் கவலை கொள்ளவேண்டுவதில்லை. ஆனாற் பார்ப்பனர் மாத்திரம் அடியராதலில்லையா? சாதியால் அவர் அடியரல்லரெனக் கொண்டாலும் தனிப்பட்ட முறையில் பல பார்ப்பனர் மற்றைச் சாதியினருக்கு அடியரா யிருந்தே வந்திருக்கின்றனர். இன்னும் அவ்வடிமைப் பார்ப்பனரைப் பலராக நேரிற் பார்க்கலாம். க்ஷத்திரியரும் அவரிற் கீழிட்டாரும் சாதியால் தம்மின் மேற்பட்டாருக் கடியராயினும் அவருட் பலர் தம்மின் மேற்பட்ட சாதியினருக்கு அதிகாரிகளாகவும் இருந்தார். அதுவும் பிரத்தியக்ஷம். அடிமைத்திறம் பலகாரணங்களால் நிகழும். அந்நிகழ்ச்சி சாதிவித்தியாசமற்றது.

குலத்தூய்மையின்மை யொன்றே வழிவழியாக மானக்கேட்டைத் தரும். ஒரு கூட்டத்தினரைச் சூத்திரரென்று சொன்னால் அக்கூட்டத்தினர் தாம் முதன்மூன்று சாதியினருக்கும் அடியாராக வேண்டுமே யென்ற கவலையாலா, குலத்தூய்மையில்லாதவரென்று கருதப்பட்டுவிடுவமே யென்ற கவலையாலா அச்சூத்திரப்பட்டத்தை வெறுக்கின்றனர்? முதற்கவலை முன் விவகரிக்கப்பட்டதால் தணியலாம். சூத்திரரென்ற பதத்துக்கு வேசிமக்களென்ற பொருளிருப்பதாகச்சிலர் சொல்வர். அப்பொருளே இக்காலத்தில் முனைந்து நிற்கின்றது. வேசிமக்களே தம்மை வேசிமக்களெனச் சொல்லிக்கொள்ளக் கூசுவர். அங்ஙனமாக அவ்வேளாளர் தம்மை அப்பொருளிற் சூத்திரரென எப்படிச் சொல்லிக்கொள்வர். உண்மையில் அவர் வேசிமக்களா? இல்லையே. யாம் அவரைச் சூத்திரரென்று வைத்துக் கொள்வதற்குக் காரணங் கூறவேண்டுவதசியமாகும். அக்காரண மிது. சூத்திரரென்ற பதத்திற்கு வேசிமக்களென்ற பொருளில்லை. சில விடங்களில் வேசிமக்களுஞ் சூத்திரரென அழைக்கப்படுவதுண்டு. ஆனாற் சூத்திரரென்ற பதம் முதலாவது யாருக்கு வழங்கப்பட்டது? பிரமாவின் காலிலுதித்த சாதியினருக்கே அப்பெயர் முதன்முதல் வழங்கப்பட்டது. அச்சாதியினர் வேசிமக்களா? ஆமென்று அடிமுட்டாளுஞ் சொல்லமாட்டான். பிராமணர் முதல் அச்சூத்திரர்வரையுள்ள நான்கு சாதியினருந் தூயகுலத்தினரென்பதே சர்வசாஸ்திராங்கீகாரமாகும். அச்சூத்திரரை வேசிமக்களென்று சொல்பவன் பிராமணனாயினும் அவன் தன்னையே வேசிமகனென்று சொல்லிக்கொண்டவனாவான். பிரமாவுக்கு மனைவி சரசுவதி. அவன் அச்சாதியினரை அவள் வயிற்றிற் பெற்றிருக்கலாம். அவன் அப்படிச் செய்யவில்லை. அவன் நேரே அச்சாதினரைப்பெற்றான். அதற்குத் தாற்பரியமென்னை? ஒருவனுக்குக் குலத்தூய்மை அவன் இன்ன ஆடவனுடைய வயிற்றிற் பிறந்தானென்பதனாலேயே சித்திக்கும். ஓராடவன் பல பெண்டிரைக் கமனித்துப் பிள்ளைகளைப் பெறுவானாயின் அப்பிள்ளைகள் அசுத்தகுலத்தினரென்று சொல்லப்படமாட்டார். ஒரு ஸ்திரீ பல புருஷரைக் கமனித்துப் பிள்ளைகளைப் பெறுவாளானால் அப்பிள்ளைகளே வேசிமக்களெனப்பட்டுக் குலக்கேடராவர். ஆகவே பெண்டிர் வயிற்றிற் பிறப்பதாற்றான் குலக்கெடுதலுமுண்டென்பது தெரிக. பிரமா அந்நான்கு சாதிகளையும் நேரே பெற்று அவற்றின் தூய்மையை உலகில் நிலையிட்டான். அதனால் வேளாளரைச்சூத்திரரென்று யாம் சொல்வதால் அவருள் ஒருவேமாகிய நமக்கு அது குற்றமாகப்படவில்லை.

ஆனால் வேசிமக்களுஞ் சூத்திரரெனப்பட்டனரென்று முன்சொல்லப்பட்டது. அவர் சூத்திரரானதெப்படி? அவரோடு அவ்வேளாளரிடை

வித்தியாசங் காண்பதெப்படி? அவற்றிற்கு விடைகளிவை. முதல் நான்கு சாதிகளிலும் சோரம்போன பெண்டிர் அச்சாதிகளினின்றும் அவ்வப்போது விலக்கப்பட்டனர். அவர் வயிற்றிற் பிறந்த கலவை மக்களும் பலுகிப் பெருகினர். அவர் அவ்விழிதகையினராகவே யிருக்க விரும்பவில்லை. காலஞ் செல்லச் செல்ல அவருள்ளும் பல சாதிகளுண்டாயின. சிற்சில ஆசாரங்களையும் அச்சாதியினர் மேற்கொள்ளலாயினர். அவருக்குத் தங்குலக்கேடு மறையவேண்டுமென்ற ஆசையுண்டாயிற்று. அந்நான்கு சாதிகளுள் ஒருசாதியினரென்று அவர் தம்மைச் சொல்லிக்கொண்டாலன்றி அவருக்கு அக்குலக்கேடு மறையாது. அவ்வாறு சொல்லிக்கொண்டவர் பலர். அங்ஙனமாய பிராமணராதியோர் இப்போது இத்தமிழ் நாட்டி லில்லாமலில்லை. ஆனால் அவர் தம்மைப் பிராமணரென்றும் க்ஷத்திரியரென்றும் வைசியரென்றும் சொல்லிக்கொள்ளும்போது அநேகமாய் அந்தச் சாதிப்பெயர்களுக்குமுன் ஏதேனுமொரு அடைமொழியை வைத்துக்கொள்வர். அடைமொழியில்லாமலே அந்தப் பிராமண க்ஷத்திரிய வைசிய நாமங்கள் குறிக்குஞ் சாதியினருக்கு அவர் வேறானவரென்பதை அவ்வடைமொழிகளாற் கண்டு கொள்வதெளிது. ஆகவே முதன் மூன்று சாதியினர் அவ்விடைக்கால முச்சாதியினருடன் கலந்து தம் தூய்மையை யிழக்க இடமேற்படாதென்க. அப்படியே தம்மைச் சூத்திரரெனச் சொல்லிக்கொண்ட சாதியாரும் பலருளர். ஆனால் அவர் அச்சூத்திர நாமத்துக்குமுன் எந்த அடைமொழியையும் வைத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே நாலாங்குலத்தினராகிய தூயகுலச் சூத்திரரே தமக்கோரடைமொழியை யமைத்துக்கொள்ளவேண்டியவரானர். அவ்வவசியம் முதன் மூன்றுகுலத்தாராலுமே உணரப்பட்டது. பிரமாவின் காலிலிருந்து நேரே வந்த சூத்திரர் வேசிமக்களெனப்பட்டால் முகமாதியவற்றிலிருந்து வந்த பிராமணராதியோரும் ஏன் வேசிமக்களாக எண்ணப்படமாட்டார்? ஆகவே அத்தூயகுலச் சூத்திரர் தம்மைச் சற்சூத்திரரெனச் சொல்லிக்கொள்ளலாயினர். அந்த ஸத்தென்னும் அடைமொழி அம்முச்சாதியினருக்கும் அங்கீகாரமாயிற்று. அந்த அடைமொழியே ஏனைச் சூத்திரரினின்றும் வேளாளசூத்திரரைப் பிரித்து வைத்தது. அவ்வேளாள சூத்திரரும் ஏனைச் சூத்திரருடன் கலந்து தம் தூய்மையை யிழக்க அவ்வடைமொழி இடங்கொடாது.

ஆனால் ஹிந்துலா என்ற சட்டப்புத்தகத்தில் சூத்திரர்க்கென ஏற்பட்டுள்ள சில சட்டங்கள் பிராமண க்ஷத்திரிய வைசியரைப் பாதியாமல் அவர்போற் குலத்தூயரான வேளாளசூத்திரரைப் பாதிப்பதேன் என்று சிலர் வினவலாம். அது அந்தப்பிராமணராதியோருக்கு மானமில்லையென்

பதையே முதன்முதற் காட்டுகிறது. அவர் தம் குலத்தூய்மையை மதிக்க வருங் காலத்தில் அவ்வேளாளரை அச்சட்ட நிர்ப்பந்தங்களினின்றும் விலக்கியேவைப்பர். வேளாளருந் தமக்குள்ள ஸத்தென்னும் அடைமொழியின் வேகத்தை மதிக்கவல்லராயின் அந்தப் பிராமணராதியோரின் சகாயமின்றியே அந்நிர்ப்பந்தங்களினின்றும் விரைவில் நீங்கிக் கொள்ளலாம்.

வேளாளர் இன்னசாதியினரென்று தீர்மானிப்பது இந்தக்கட்டுரைக்கு நோக்கமன்று. சைவசமயத்தோடு அவர்எப்படிப்பட்டதொடர்பைக்கொண்டவரென்பதே இங்காராயப்படுவது. அந்தஅளவிற்கு அவர் பெருமையுட் சிறிதே ஈண்டுக் கூறப்படுகின்றது. தமிழ்நாட்டிலே வேளாளர் ஒரு சிறந்த குலத்தினர். அவரிடம் கல்வி அறிவு ஒழுக்கம் ஆண்மை வண்மை உண்மை ஆசாரம் கருணை முதலிய சகல தருமங்களுங் குடிகொண்டிருக்கும். சங்கப்புலவர்களுட் பெரும்பாலோர் வேளாளரே. பாரிமுதலிய வள்ளல்களெல்லாரும் வேளாளர். பழையனூர் நீலிசரித்திரத்திற் சொன்ன சொற்காத்த சத்தியசந்தராகிய எழுபதுபேரும் வேளாளர். நாயன்மார்களுள் வேளாளரே அதிகர். சிவஞானபோதத்தைத் தமிழில் வழங்கிய ஸ்ரீ மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள் வேளாளர். அந்நூலுக்குத் திராவிட மஹாபாஷ்யஞ் செய்தருளிய ஸ்ரீமத் சிவஞானசுவாமிகள் வேளாளர். சரித்திராசிரிய திலகமாகிய ஸ்ரீ சேக்கிழார் பெருமானார் வேளாளர். திவ்விய புராணங்கள் பலவற்றைச் சிறந்த தமிழிற் பெயர்த்தருளிய சிலர்களுட் பெரும்பாலோர் வேளாளர். ஸ்ரீமத் ஞானசம்பந்த சுவாமிகள் ஸ்ரீமத் உமாபதிசிவாசாரிய சுவாமிகள் முதலிய பிராமணோத்தமர்களாற் பெரிதும் புகழப்பட்ட சாதியாராவர் அவர். அந்த இராமாயணம் அம் மட்டில் நிற்க.

சீருஞ் சிறப்புமுடைய அவ்வேளாளர் இப்போது எப்படியிருக்கின்றனர்? அதைப்பேச எமக்கு வெட்கமாயிருக்கிறது. ஆயினும் புண்ணைப் பொதிந்து வைத்து மூடல் சரியன்று. யாம் எம்மவராகிய அவர் திருந்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர் பரிதாப நிலைகளிற் சில கூறுகின்றோம். அதனால் மற்றைச்சாதியினர் சந்தோஷமடையவேண்டாம். குறைகள் எச்சாதியிலுமுண்டு. அவ்வேளாளருட் பலர் தம்மை வேளாளரென்று சொல்லிக் கொள்ளக் கூசுகின்றனர். வேசிமக்கள், பெண்டிர் பல தடவை மணந்துகொள்ளுங் கூட்டத்தினர், தங்கை முதலிய முறையுடையாரையும் வயதின் மூத்த பெண்டிரையும் மணந்துகொள்ளுங் கூட்டத்தினர், புலாலுணவினர் முதலிய பலவகையினர் தமிழருள்ளுந் தமிழகத்தினருள்ளுஞ் சைவசமயத்தினருள்ளு மிருப்பர். அவ்வேளாளர் தம்மையும் அவ்வேசி மக்கள் முதலோரையுஞ்சேரப்பிணித்துள்ள தமிழர் தமிழகத்தினர்

சைவசமயத்தினர் முதலிய பொதுப்பெயர்களுட் புகுந்து அவரோடு உண்டுடுத்துக் கொண்டுகொடுத்தவராத் தணிந்துவிட்டனர். சோரம்போனவளைச் சேர்த்துக்கோடல், வைப்பாட்டிமாரைக் குடும்பத்தில் வைத்து வாழ்தல், கள்ளுசாராயங்களைக் குடித்தல், பெண்டிரை யடக்கியாளுந் திறனற்று அவர்முன் சலாம்போடுதல், தம்சாதி மரியாதை கெடாமல் மற்றைச் சாதியினருடன் பழகும் வகைகெட்டு இவரும் வேளாளராமென்று அவர் செய்யும் பரிகாசத்துக் காளாகியலைதல், தம்முன்னோர் மற்றைச் சாதியினருடன் அன்புவாயிலாய்ப்பழகி அவரிடமிருந்து அபிமானத்தைப் பெற்றுத் தமக்குரிய கௌரவத்தைக் காத்துவந்ததை யறியாமல் அவ்வேற்றுச் சாதியினரைக் கண்டஞ்சி அவருடன் அற்பத்தனமான சகவாசஞ் செய்தல் முதலியவெல்லாம் அவரிடங் கொஞ்சங் கொஞ்சமாக வந்துகொண்டிருக்கின்றன. க்ஷத்திரிய மித்திரன் வைசியமித்திரன் விசுவகருமன்முதலிய பல சாதிப்பத்திரிகைகள் இத்தமிழ்நாட்டிலுள. அம்மாதிரி வேளாளமித்திரன் வேளாளன் என்ற பெயருடன் நிலவும் சாதிப்பத்திரிகையொன்றுதானும் உண்டா? வருஷத்துக்கொரு மகாநாடுதானுமுண்டா? இல்லையே. அவ்வின்மையால் அறியக்கிடப்பதென்ன? வேளாளசாதியின்வரம்பைக்காத்து அதன் தூய்மையை யெங்கும் வெளிப்படுத்தி மகிழவேண்டுமென்ற மானவுணர்ச்சி அச்சாதி மக்களிடம் சூனியமாய் விட்டதென்பதே அறியக்கிடப்பதாம். இழிகுல மக்கள் உயர எண்ணி வேறெந்தச் சாதிகளிலும்போய்ப் புகுந்து கொள்ளமுடியாது. யானும் உம்மினத்தானேயென்று சொல்லிக்கொண்டு ஒருவன் கம்மியர் கூட்டத்துட் புகமுடியுமா? செக்கார் கூட்டத்துட் புகமுடியுமா? அம்முடியாமைக்கெல்லாங் காரணமென்ன? அவரெல்லாந் தஞ்சாதி வரம்பைக் கூடியவரை நன்கு அறுதியிட்டுக் காத்து வருகின்றனர். ஆனால் வேளாள சாதிவரம்பை வேளாளர் காவாமையால் 'கள்ளன் மறவன் கனத்த அகம்படியன் மெல்ல மெல்ல வந்து வெள்ளாளரானே' 'தமிழிலே கெட்டவன் முதலியார். தெலுங்கிலே......' என்பனவாதிய உலகர் மொழிகள் பிறக்கலாயின. கெட்டவனென்பதற்குப் பொருளை அவ்வுலகர்வாய்க் கேட்டறிக. அவ்வச்சாதிக்கு வேண்டிய சகலவிதவலிமைகளும் அவ்வச்சாதியினரிடமுண்டு. ஒவ்வொரு சாதியிலும் ஒவ்வொரு மனிதனும் தன் படிப்பு பணம் பதவி முதலியவற்றாற் கிடைக்கும் ஒரு பகுதியைத் தன் சாதிமுன்னேற்றத்துக்கு நிச்சயமாய்க் கொடுக்கிறான். வேளாளருள்ளோ மிகப் பெரும்பாலோர் தத்தம் உழைப்பைத் தத்தமக்கேவைத்துக் கொண்டு தம்சாதியபிமானத்தை அறவே விடுகின்றனர். இப்படியே யெழுதிக்கொண்டு போனாற்பக்கங்கள் பெருகும். இம்மட்டோடு இது நிற்க. ஆனால் ஒரு செய்தி மிகவுங் கருதற்பாலது. அஃதிது. வேளாள சாதியைப் பலர் பகைக்கின்றனர். பார்ப்பனத் துவேஷம் போன்றதொரு வேளாளத்துவேஷம் ஆங்காங்குப் புகைந்துகொண்டுதானிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் வேறு சிலபல சாதியினரின் வெளிப்படையான பகைமைக்கு அவர் ஆளாகவேண்டிவரும். ஆகலின் முன்ஜாக்கிரதை அவர்க்கு மிக அவசியமாமென்க.

வேளாளர் தம்மைச் சூத்திரர் அல்லது வேளாளர் என்றனர். வேறு பல சூத்திரரும் வேளாளருந் தோன்றினர். அப்போது அம்முதல் வேளாளர் தம்மைச் சற்சூத்திரர் அல்லது சைவவேளாளர் என்றனர்.

சத்துஞ் சைவமும் பரியாயங்களாயின. உலக வழக்கில் சற்சூத்திரரென்ற பிரயோகம் மறைந்து சைவவேளாளரென்ற பிரயோகம் நிலவியது. அப்போது வேறுபல சூத்திரர் தம்மையுஞ் சைவவேளாளரென்றனர். அம்முதல் வேளாளர் அப்பால் தம்மைப் பரம்பரைச் சைவவேளாள சாதியினரென்று சொல்லிக்கொள்ள வேண்டியவரானார். அம்மட்டிலாவது அவர் சாதிப்பெயர் நிற்கவேண்டும். மேலும் அடைமொழிகளைச் சேர்த்துக்கொண்டுபோக அவர் இடம் வைத்துக் கொள்ளுதல் கூடாது. ஊர்தோறும் பரம்பரைச் சைவவேளாள சங்கம் இருத்தல் வேண்டும். அச்சாதிசன சங்கை குறிக்கப்பட்டிருத்தல்வேண்டும். அங்ஙனமாய சங்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகளாலாய தாலூகாச் சங்கங்களும், தாலூகாச் சங்கங்களின் பிரதிநிதிகளாலாகிய ஜில்லாச் சங்கங்களும், ஜில்லாச் சங்கங்களின் பிரதிநிதிகளாலாகிய மாகாணச் சங்கமும் இருத்தலவசியம். அச்சங்கங்களின் அங்கீகாரம்பெற்ற குடும்பங்களுக்குள்ளேயே பெண்கொண்டு கொடுத்தல் சமபந்தி போசனம் முதலியன நடத்தல்வேண்டும். இப்படியான காரியங்களை இல்லை தொடங்கல் அவசியம். வரம்புசெய்து கொண்டு வாழாத சாதி பிறரின் புறங்கூற்று மொழிகட் காளாவது நிச்சயம். அதனைச் சகித்துக்கொண்டிருப்பதினும் வாழாமை முன்னினிதே.

திருவாவடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் முதலிய சைவமடங்களெல்லாம் அப்பரம்பரைச் சைவவேளாள மடங்கள். அவை அப்படியேயிருந்து வரவேண்டும். ஆனால் வேற்றுச்சாதியினர் அவற்றை யபகரித்தற்குப் பெருமுயற்சி செய்து வருகின்றனர். தமிழர் மடங்கள், தமிழக மடங்கள் சைவமடங்கள் என்னும் பொதுப்பெயர்களையே அவர் அப்பொருட்டுத் தமக்குச் சாதகமாகக் கொள்வதுண்டு அம்மடங்களினதிபர்கள் அச்சூழ்ச்சியை நன்கு கண்டருள்க. மேற்கண்டபடி சங்கங்களை நிறுவி அச்சாதிவரம்பைக் காத்துவருவதே அம்மடங்கள் புறம்போகாமலிருப்பதற்குச் செய்யப்படும் முதல் வேலையாகும். அம்மடங்களின் தலைவர்களும் அச்சாதிப் பிறபெரியார்களும் உணர்ச்சிகொண்டு அச்செயலைத் தொடங்குவார்களாக. (தொடரும்)

சைவ சமய விளக்கம்.

(திருத்தென்குடித்திட்டை சித்தாந்த வித்தியாசாலைத் தமிழாசிரியர், திரு, த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்.)

(184-ம் பக்கத்தொடர்ச்சி.)

22. ஏகபாதர்—ஒரு திருவடியும் மூன்று கண்ணும் நான்குதோளும் சூலப்படையும் கொண்டு சர்வ சங்கார காலத்தில் சத்தியில் எல்லா வுயிரும் ஒடுங்க, சத்தி தம்மிடம் ஒடுங்கத்தாம் ஒருவரே அழியாதிருத்தலைக்காட்டும் திருவுருவம். 23. சுகாசீனர்—வேதசிவாகமப் பொருளை சுகாசனத்திலிருந்து உமாதேவியாருக்குத் திருவாய்மலர்ந்த திவ்விய வடிவம். 24. தட்சிணாமூர்த்தி—சிவபெருமான் கல்லாலின் கீழே தென்முகமாக இருந்து சனகாதி முனிவர்கட்கு ஞானத்தை யுணர்த்திய வடிவம். 25. இலிங்கோற்

பவர்—திருமாலும் பிரமனும் செருக்குற்று முறையே பன்றியும் அன்னமுமாய் அடிமுடி தேடிக் காணாராய் இறைவனை வழிபட்டுத் துதிக்க அவர்கட்குக் காட்சியளித்தருளிய திருக்கோலம்.

எனவே, மேலே காட்டப்பட்ட மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்து மட்டுமன்றி அவ்வப்போது அன்பர்கள் பொருட்டுத் தமது இச்சையால் திருமேனிகொண்டு அருளிய அவசரங்கள் பல. அவற்றை விரிக்கிற் பெருகும். சிவபெருமான் தம்முடைய அன்பர்களுக்கு அநுக்கிரகித்த முறைகளைப்பலரும் அறிந்து அவரைவழிபட்டுய்தற் பொருட்டே இம்மூர்த்திகளையும் திருக்கோயில்களில் எழுந்தருளச் செய்திருக்கின்றனர் பெரியோர். இலிங்க வடிவத்துக்கும் மேலேகாட்டிய இருபத்தைந்து மகேசுவர வடிவங்களுக்கும் வேறுபாடில்லை. தத்துவங் கடந்த தனிமுதற் பரம்பொருளினுடைய திருவருட் டிருமேனிகளே அவையென்றுணர்ந்து அந்த வடிவங்களையும் வழிபடுதல் வேண்டும்.

இதுகாறும் கூறியவாற்றால் சைவர்களாகிய நாம் வழிபடுங் கடவுள் சிவபெருமானே என்பதும், அவர் ஒருவரே பிறப்பிறப்பற்ற பெரும் பொருள் என்பதும், அவருக்கு உரியவாய் நம்மால் வழிபடப்பெறும் திருமேனிகள் அருவம். அருவுருவம்உருவம்என்பதும், அருவத்திருமேனிகொள்ளும்போது சிவன் என்றும் அருவுருவத்திருமேனி கொள்ளும்போது சதாசிவன் என்றும் உருவத்திருமேனி கொள்ளும்போது மகேசுவரன் என்றும் சிவபிரானை நாம் வழங்குகிறோம் என்பதும், மகேசுவரவடிவம் இருபத்தைந்து என்பதும், அவற்றின் விவரம் இன்னதென்பதும் அறிந்தோம். இனிச் சிவபிரான் எட்டுவடிவினர் என்பதையும் ஆராய்வோம். பிருதிவி (மண்), அப்பு(நீர்), தேயு(தீ), வாயு(கால்), ஆகாசம்(வான்), சூரியன் (ஞாயிறு), சந்திரன் (திங்கள்), ஆன்மா ஆகிய இந்த எட்டும் தமக்குரிய வடிவாகக் கொண்டு சிவபிரான் விளங்குகிறார். எனவே, நாம் இவ்வெட்டு வடிவங்களிலும் இறைவனை வணங்குகிறோம். இதனையாராய்ந்தறியாத ஒரு சிலர் மேற்கூறிய எட்டுப் பொருள்களையுமே தனித்தனி தெய்வமெனக் கருதிவணங்குவர். இவர்கட்குரிய அறிவு சமய ஆராய்ச்சிமுறையில் தாழ்ந்ததேயாம். மற்றும் சிவபிரானுக்கு ஒன்பது வேறு பாடுகள் கூறப்படும். அவையாவன—பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், நாதம், விந்து, சத்தி, சிவம்என்பன. எனவே, சிவபெருமான் பிரமனை அதிட்டித்து நின்றுபடைத்தல் தொழிலையும், விஷ்ணுவை அதிட்டித்து நின்றுகாத்தல் தொழிலையும், உருத்திரனை அதிட்டித்து நின்று அழித்தல் தொழிலையும், மகேசுவரனை அதிட்டித்து நின்று மறைத்தல் தொழிலையும், சதாசிவனை அதிட்டித்துநின்று அருளல்ஆகிய ஐந்தொழிலையும் செய்கிறார். அதிட்டித்தல் என்னும் சொல்லுக்கு நிலைக்களமாகக்கொண்டு செலுத்துதல் என்பது பொருளாகும். முதல் நான்கும் சிவபெருமானுடைய உருவத் திருமேனிகள். இறுதி நான்கும் சிவபெருமானுடைய அருவத் திருமேனிகள். இடையிற் கூறிய சதாசிவன் ஒன்றும் அருவுருவத் திருமேனி. இச்சதாசிவ மூர்த்தமே சிவலிங்க வடிவம் இன்னும் சிவபெருமான் குருவடிவாகவும், சிவலிங்கவடிவாகவும் சிவனடியார் வேடமாகவுமிருந்து ஆன்மாக்களாகிய நமக்கு அருள் செய்கின்றார்.

ஆகலின், சிவபெருமானைக் குருவடிவத்திலும், சிவலிங்க வடிவத்திலும், சிவனடியார் வடிவத்திலும் வைத்து வழிபடல் வேண்டும். குருவையும், சிவனடியார்களையும் சிவபெருமானே எனத்தேறி வழிபட வேண்டும். மறந்தேனும் வழிபடாமையைத் தவிர்க்கவேண்டும். நம்மில் ஒரு சிலர் சமய உணர்ச்சி சிறிதேனுமின்றி வாய்க்கு வந்தவாறெல்லாம் பிதற்றுவர். அவரும் சமய உணர்ச்சி கைவரப்பெற்றால் பிதற்றுரை கூறார். உண்மையறிந்து இன்புறுவர்.

முதல்வகுப்புப் படிக்கும் ஒரு மாணவன் அப்புத்தகத்தைப் படித்தல் கூடும். இரண்டாவது வகுப்பு மாணவன் முதற்புத்தகத்தையும் இரண்டாவது புத்தகத்தையும் படித்தல் இயலும். மூன்றாம் வகுப்பிலுள்ளவன் அவ்விரு வகுப்புப் புத்தகங்களையும் தனக்குரிய மூன்றாம் புத்தகத்தையும் படித்தல் முடியும். நான்காம் வகுப்பிலுள்ளவன் தன் வகுப்புப் புத்தகத்துடன் கீழுள்ள மூன்று வகுப்புப் புத்தகங்களையும் படிக்கவல்லவனாவான். ஐந்தாம் வகுப்பு மாணவன் தன்வகுப்புப்புத்தகங்களுடன் மற்றுங்கீழுள்ள நான்குவகுப்புப் புத்தகங்களையும் படிக்குந் திறமுடையவனாவான். எனினும் கீழ்வகுப்பு மாணவனைவிட மேல்வகுப்பு மாணவன் போகப் போகத் திறம்படப் படித்தலை அநுபவத்தில் நாம் காண்கின்றோம். அவ்வாறே பிரமன் படைத்தற்றொழில் ஒன்றும், விஷ்ணு படைத்தல் காத்தல் என்னும் தொழில் இரண்டும், உருத்திரன் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்றும், மகேசுவரன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் ஆகியநான்கும், சதாசிவன் முற்கூறிய நான்கு தொழில்களுடன் அருளல் ஆகிய ஐந்தும் செய்ய வல்லவராவார். எனினும் பிரமனிலிருந்து மேலே போகப்போக மற்றை நால்வரிடத்தும் உள்ள படைத்தல் முதலிய தொழில்களில் பெரிதும் வேறுபாடு காணப்படும். இது நுணுகி அறியற்பாலது. இங்ஙனமாக, பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் ஒருவரே என்பர் அறியாதார். சமய உணர்ச்சி சிறிதேனு முள்ளவர் அவ்வாறு கூறார். ஒருசிலர் 'நான் தெய்வங்களிடத்தில் வேறுபாடு கருதேன். எனக்கு எல்லாம் ஒன்றே' என்பர். அவரை நோக்கி ஐயா! நீங்கள் பெண் வடிவங்களெல்லாம் ஒன்றே எனக் கருதும் பெரியார்தான். பெண்ணுறுப்புக்களில் ஒரு சிறிதும் பிழையாத தாயையும், தங்கை தமக்கைகளையும், மனைவியையும், மகளையும் ஒருதன்மையாகக்கொண்டு ஒழுகுவீர்போலும் என்போமாயின் அவர் என்ன விடைகொடுப்பார் என்பதைச் சிந்தியுங்கள். பெண்ணுறுப்புக்களில் பிழையாதாராயினும் அவர்களை எவ்வாறு நாம் பயன்படுத்தி முறை வழங்கி வருகின்றோமோ அவ்வாறே தெய்வங்களாயினும் அவர்களில் அதிகாரம் முதலியவற்றால் வேறுபாடுகள் பல உள. உடம்பினுள் உயிர் புக்கிருந்தால் மட்டுமே இயங்கும் வன்மையுண்டு. அஃதின்றேல் இயங்குந்தன்மையுமின்றாம். அதுபோலவே பிரமன், திருமால் முதலிய தேவர்களிடத்துச் சிவபெருமான் உயிருக்குயிராகக் கலந்திருந்து உணர்த்தினால் மட்டுமே அவர் அத்தொழில் செய்ய வல்லவராவார் என்பதை நன்கு நாம் உணர்தல்வேண்டும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மணிவாசக சங்கம்

முப்பத்தொராவது ஆண்டின்

அறிக்கைப் பத்திரம்.

காப்பு.

"ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே."

சித்தி விநாயகர் செய்யபே ரருளால்
எத்திசை யும்புகழ் எழில்மிகு பாண்டி
நன்னா டாளுநங் குமர நாயகன்
மன்னிவீற் றிருக்கும் வளமிகு குன்றக்
குடியி னணித்தாய்க் குலவிய பலவான்
குடியெனப் புலவர் குழாம்புக ழூர்தனில்
சீலமும் அறிவுஞ் சேர்தரு கல்வியும்
உலவா வின்பம் ஒருங்கே யுதவும்
சைவநன் னெறியுஞ் சார்சிவ மான
தெய்வத் தன்மையுந் தெளிவுற விளங்கப்
பின்னுக மையா யிரத்துப் பன்னிரண்
டன்னசா தாரண ஆவணி மூன்று
சிறந்த வியாழன் சேருத் தராடம்
பொருந்துநன் னாளிற் புகழ்பெற வமைந்த
மணிவா சகப்பெயர் மாண்புறு சங்கமும்
அணிமிகு கன்னிமூ வொன்பதாந் தசமி
பொன்னின் வாரம் பொற்புட னிலவிய
நன்னய மானநற் சித்தி விநாயக
வித்தியா சாலையும் மேவிய சண்முக
புத்தக சாலையும் புண்ணியப் பதியாம்

பருவநாள் விழவொடும் பாடலோ டாடலும்
திருவினான் மிகுபுகழ்த் தென்குடித் திட்டைத்
திருத்தல மதனிற் சேர்தாது சித்திரை
அருட்டிரு வாதிரை யாதித்த வாரம்
சித்தாந்த வித்தியா சாலை யாதியாய்த்
திகழ்ந்துநா ணாளுந் தெள்ளிய ராக
மாணவர் பலர்க்கு மாண்பொரு ளுணர்த்தி
நீணிலம் போற்ற நேர்மை யுடனே
என்று மின்பம் பெருக மியல்பினால்
நின்று நிலவி நீடுவா ழியவே.

அருட்டிறம் வாய்ந்த அவைத்தலைவரவர்களே! அவையோர்களே!!

சித்திவிநாயகர் திருவருளால், சித்தாந்தவித்தியாசாலை, சண்முக விலாச புத்தகசாலை என்னும் இவற்றுடன் சேர்ந்து விளங்கும் மணிவாசக சங்கத்தின் முப்பத்தோராவது ஆண்டுத்திருவிழாவுக்குப்பேரன்பினால்வந்து குழுமியிருக்கும் பேரறிவாளர்களாகிய உங்கள் முன் இவைகளின் வளர்ச்சியை முறையே அறிவிக்கின்றோம்.

செந்தமிழ்ப் பாண்டித் திருநாட்டின்கண்ணே திருவளர் குன்றக்குடியின் வடபால், சீர்திகழ் பலவான்குடியினில், கடையுகத்தாண்டு ௫௦௧௨ ஆன சாதாரண ஆவணி ௰௨ குமாரவிநாயகர் திருக்கோயில், திருவாசக பாடசாலை, செங்கமலத் திருக்குளம், திருநந்தவனம், தண்ணீர்ப்பந்தர் ஆகிய பிரதிட்டா கும்பாபிடேகமான உத்தராடநாள் மணிவாசகசங்கமும், சாதார்ண புரட்டாசி ௨௭ விஜயதசமியன்று சித்திவிநாயக வித்தியா சாலையும், சண்முகவிலாச புத்தகசாலையும் தொடங்கப்பெற்றனவாகும். தொடக்கத்திலிருந்து அவைகள் அரிய பெரிய தொண்டுகளை நன்றாற்றி வந்துள்ளன.

இன்னும் மேன்மையான தொண்டாற்றுவான் வேண்டித் திருஞான சம்பந்தப் பெருமானாரின் தேவாரத் திருப்பதிகம் பெற்றுச் சிறப்புற்று மிளிரும் திருத்தென்குடித்திட்டை என்னும் இத்திருத் தலத்தின்கண்ணே, திருவருட்பேறு கருதிப் பின்னுகம் ஐயாயிரத்து முப்பத்தெட்டெனப் பேசும் தாதுவருடம் சித்திரைமாதம் பதினான்காந்தேதி (26—4—1936) பானுவாரம் திருவாதிரைத்திருநாள் சித்தயோகம் கூடும் நன்னாள் தன்னில் சித்தாந்த வித்தியாசாலை எனவும், மணிவாசக சங்கமெனவும், சண்முக விலாச புத்தகசாலை யெனவும் இனிது நிறுவப்பெற்றுள்ளன.

மணிவாசக சங்கம்.

இச்சங்கம் தோன்றியதிலிருந்து மாதக்கூட்டங்களும், வருடக் கூட்டங்களும், மாட்சிமிக்க பல பெரியார்களின் தலைமையில் சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கச்செந்நாப்புலவர்களின் சீரிய விரிவுரைகளும், மாணவர்களின் கட்டுரைகளும் மாண்புடன் நிகழ மேன்மையாக நடைபெற்று விழாக்களுங் கொண்டாடப்பெற்றன.

உள்ளூர் அன்பர்களும், வெளியூர் அன்பர்களும், சிவநேசர் திருக்கூட்டத்தினரும் வழக்கமாக முன்னின்று நடத்திவைத்தனர். இச்சங்கத்திலிருந்தே சிவநேசர் திருக்கூட்டம் தோன்றிச் சீரிய தொண்டாற்றி வருகின்றது.

இதன் முப்பதாவதாண்டுத் திருவிழா திருத்தென்குடித்திட்டை சித்தாந்த வித்தியாலய மண்டபத்தில் விக்கிரம சித்திரை ௨௯ திருவாதிரை நாள் முற்பகல் பிற்பகல்களில் நடைபெற்றது. திருக்கூட்டமுதல்வரும், கற்பகவிநாயக கலாசாலை ஞானசம்பந்த நற்சபை வாணிமந்திர புத்தகசாலையாதிய அறநிலையங்களின் தாபகரும் புரவலரும் ஆகிய கோநகர் சிவநேசப் பெருஞ்செல்வர் சு. மு. மஹாதேவ முருகப்பசெட்டியாரவர்களை இச்சங்கத்தார் வரவேற்றுமுற்பகல் சிவாலயதரிசனம் செய்வித்துத் தேவார பாராயணத்துடன் திருவீதிவலமாக அழைத்துவந்து தலைமைவீற்றிருக்கச் செய்தனர். தேவார திருவாசகாதித் திருமுறைகளைக் கோட்டையூர் தமிழ்மறைவாணர்களாகிய சிவலோகநாத தேசிகர், சோமசுந்தர தேசிகர் ஆகிய சைவத்திருவாளர்களும், உள்ளூர் ப. சோமசுந்தர ஐயர், கதி. சம்பந்தப் பிள்ளை, கதி. சிங்காரவேற் பிள்ளை, இ. சம்பந்தப் பிள்ளை (பேச்சிமுத்து) ம. சுந்தரப்பிள்ளை, ம. மகாலிங்க சேர்வை, ரெ. கோவிந்தராஜலு ஆகிய தேவார மாணவர்களும், சித்தாந்த வித்தியாசாலை மாணவர்களும் இன்னிசையுடன் ஓதினர். 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் வரவேற்பு வாழ்த்துப்பத்திரம் வாசித்து வழங்கினர். திரு, ராம. குமரப்ப செட்டியாரால் ஆண்டு அறிக்கை வாசித்து வழங்கப்பெற்றது. அவைத்தலைவரவர்கள் இனிமையுடன் பத்திச்சுவை மலிய முன்னுரை பகர்ந்தனர். அச்சிட்டு வழங்கிய அதனை ஆண்டு ௧௫ பக்கம் 237-ல் சேர்க்கப்பட்டுள்ளது: ஆண்டுக் காணலாம். திருவையாறு அரசர் கல்லூரித் தமிழாசிரியர் திரு, இராம. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் 'தலைவன்' என்னும் பொருள்பற்றி மிக விரிவாக எடுத்து அவையினர் அன்பினுற் கேட்ப விளக்கினர். 'குறைவிலா நிறைவன்' என்னும் பொருள்பற்றிக் கொத்தமங்கலம் தெ. பழ. சித. சதாசிவச் செட்டியாரவர்கள் 'சிவபரத்துவம்' கூறினர். பிற்பகல் சித்தாந்த வித்தியாசாலை மாணவ-மாணவி

ரான பா. நாகலட்சுமியம்மை, அரங்கநாயகி யம்மை, கி. ஜெயலட்சுமி யம்மை, வீர. உருக்குமணி யம்மையாகிய திருவளர்செல்விகள் நால்வரும் முறையே 'சிறுத்தொண்ட நாயனர்', 'புகலிவேந்தரும் பூம்பாவையும்', 'தாயானசெல்வர்', 'கவுணியர் காவலரின் கருணை வெள்ளம்' என்னும் பொருள்பற்றி இடையிடையே இன்னிசையுடன் சந்தர்ப்பத்துக்கேற்ற பெரிய புராணச் செய்யுட்களை யெடுத்து உதாகரித்துப் பிரசங்கித்தனர். திருப்பெருந்துறைத் தலபுராணிகர் உயர்திரு, சுந்தரசாஸ்திரிகள் 'சிறுத்தொண்டர்' என்னும் பொருள்பற்றி மிகவிரிவாக ஆர்வமுற எடுத்து விளக்கி அனைவருக்கும் இன்பூட்டினர். தேவகோட்டை வயிநாகரம் திரு, பாலகவி இராமநாதச் செட்டியாரவர்கள், ஆலங்குடி பிரும்மஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள், தஞ்சை திரு, மு. சிவராம பிள்ளையவர்கள் ஆகிய மூவரும் 'நான்யார்', 'எண்ணும் எழுத்தும்', 'சைவத்தின் உண்மை என்பது பொருளாகக்கொண்டு சொன்னயமும் பொருணயமும் மற்றெந்நயமு மலியச் சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தலென்னும் அழகு நிரம்பத் தொகுத்துப்பேசினர். அதன்பின் பாலகவி இராமநாதச்செட்டியாரவர்கள் சித்தாந்த வித்தியாசாலை மாணவிகளின் பேச்சுத் திறமையை வியந்து நால்வருக்கும் பல புத்தகங்களைப் பரிசளித்தனர். தலைவரவர்கள் விரிவுரைகளின் நயங்களைக் குறிப்பாக எடுத்து விளக்கி அழகான முடிப்புரை கூறினர்.

ஆலங்குடி உயர்திரு, பண்டித அ. கோபாலையரவர்கள்:—

"தென்குடித் திட்டைத் திருப்பணிச் செல்வனெடு
மன்குணச் செல்வ மகாதேவ—னென்கண்
ணிரண்டுமென் றென்று மிருள்சேரா தொன்றி
முரண்டடிந்து வாழ்க முனைந்து."

எனவும்,

தேவகோட்டை பாலகவி திருவாளர், வயிநாகரம் வே. இராமநாதச் செட்டியாரவர்கள்:—

"திருவாருந் தென்குடித் திட்டைப் பதியில்
மருவு மிறைசிவனை வாழ்த்து."

"தென்குடித் திட்டைத் திருவார் பழம்பதியில்
மின்குடிகொள் வேணி விமலரருள்—இன்பமுடன்
வாழிபல வூழி மணிவா சகசங்கம்
வாழிதமிழ் சைவம் வளர்த்து."

எனவும் வாழ்த்துக் கூறினர். உள்ளூர் வெளியூர்களிலிருந்து அன்பர் பலர் வந்து குழுமியிருந்தனர். அன்பர் பலர் வாழ்த்துக் கடிதங்கள் தந்தனர். அனைவர்க்கும் 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் நன்றியறிதலுடன் வந்தனங் கூறினர். சித்தாந்த வித்தியாசாலை ஆசிரியர் திருவாளர் வித்வான் த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சந்தனம், கற்கண்டு பூமாலையாதிய வழங்க இறைவரருளால் எல்லாவகையாலும் விழா இனிது நிறைவேறியது.

சித்தாந்த வித்தியாசாலை.

மணிவாசகச்சங்கத்தைத் தனக்கு அங்கமாகக்கொண்டு விளங்கும் இவ் வித்தியாசாலை பலவான்குடிதனில் சித்திவிநாயக வித்தியாசாலை என்னும் பெயருடன் தோன்றியநாள் தொடங்கிப் பன்னூல் பயின்ற நல்லாசிரியர்களைக்கொண்டு பன்னூற்றுக்கணக்கான நன் மாணவர்கட்கு நம்நாட்டு மொழியாகிய சீரிய செந்தமிழ் மொழியும் மேனாட்டு மொழியாகிய ஆங்கில மொழியும் பயிற்றி நல்லமுறையாகப் பாடங்கள் சைவமணமும், தெய்வமணமும், தமிழ் மணமும், பிறமணமும் கமழும் வண்ணம் போதிக்கப் பெற்றன.

உடற்குறுதிபயக்கும் பாடபோதத்தினும் உயிர்க்குறுதிபயக்கும் பாடபோதமே உயரியதாகலின் உயிர்வர்க்கங்களுள் சிறந்த மக்கள்யாக்கையைப் பெற்றுப் பரிபக்குவம் உற்றவர்கள் உயிர்க்குயிராய் விளங்கும் ஆன்மநாயகனது இயல்பையுணர்ந்து 'அவனெம்பிரானென்ன நானடியேனென்ன அப்பரிசே', பெற்றுவாழும் பெருவிருப்புடன் வன்குடித்திட்டை மருவார் மருவு திருத்தென்குடித் திட்டைச் சிவதலத்தினில் சித்தாந்த வித்தியாசாலையாய்த் திகழத் திருவருட்டுணைகொண்டு நிறுவப்பெற்றது.

"சைவ சித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே" என்று பெரியார் திருவாய் மலர்ந்தருளியவாறு எக்காலத்தும் சித்தாந்தம் படிப்போர் சிலராகவே யிருக்கின்றமையால், தமிழ்ப்பாடல்களை இலக்கண இலக்கிய வமைவுடனும் தேவார திருவாசகாதித் திருமுறைகளை இன்னிசையுடனும் போதித்து வரச் செய்திருக்கிறது. வித்துவான், திருவாளர், த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆசிரியராக இருந்துபோதித்து வருகிறார்கள். மாணவர் இருபதின்மர் கல்வி பயின்று வருகின்றனர். தமிழ் இலக்கண இலக்கியங்களையும், தோத்திர ரூபமாயுள்ள தேவார திருவாசகாதி சைவத்திருமுறைகளையும் சாத்திரரூபமாயுள்ள சைவ சித்தாந்த நூல்களையும் பலரும் படித்துப் பயனுறும் வண்ணம் பரமகருணாநிதியாகிய பசுபதிப்பெயரிய தனிமுதற் கடவுளின் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

சண்முக விலாச புத்தகசாலை.

சித்தாந்த வித்தியாசாலையின் நற்றுணையாகிய இப்புத்தகசாலையின் கண் ஆயிரம் புத்தகங்களுக்கு அதிகமாகத் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. 'சிவநேசன்' முதலான திங்கள் வெளியீடுகளும், மற்றும் பல வாரத்தாள் களும் வந்துகொண்டிருக்கின்றன. புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அன்பர் பலரும் வந்து படித்து இன்புறும் வண்ணம் பரமகுருநாதன் திரு வருள் பாலிப்பாராக.

ஆண்டு நிறைவு விழாக்களில் தலைமை வகித்த திருவாளர்கள்.

(ஆண்டு ஒன்று முதல் ஆறு.)

முதல்நாள்—தி. செ. சிவஞானம் பிள்ளையவர்கள், B. A. டிப்டி கலெக்டர், தேவகோட்டை.

2-ம் நாள் — S. சாமிநாதையர், 'வித்தியாபாநு' பத்திராதிபர், கோநகர்.

7. முதல்நாள் — பா. வே. மாணிக்க நாயகர் B. E. M. G. E. எக்ஸிக்யூட்டிவ் இன்ஜினீயர், சென்னை.

இரண்டாம் நாள்—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், S. P. G. கல்லூரி, திரிசிரபுரம்.

8. பா. வே. மாணிக்க நாயகர், B. E. M. G. E. எக்ஸிக்யூட்டிவ் இன்ஜினீயர், சென்னை.

9. சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாசாரிய சுவாமிகள், ஞானியார் மடாலயம் திருக்கோவலூராதீனம், திருப்பாதிரிப்புலியூர்.

10. மகாமகோபாத்தியாயர், உ. வே. சாமிநாதையர், சென்னை.

11. S. S. சோமசுந்தர பாரதியார், M. A. B. L. ஹைகோர்ட் வக்கீல், தூத்துக்குடி.

12. மு. கதிரேசச் செட்டியார், இருமொழிப் புலவர், மகிபாலன்பட்டி.

13. பொ. முத்தைய பிள்ளை, சைவப்பிரசாகரும், சித்தாந்த வித்தியாசாலையாசிரியரும், தேவகோட்டை.

14. தே. அரு. சித. கரு. இராமநாதச் செட்டியார், கண்டனூர்.
15. மணி. திருநாவுக்கரசு முதலியார், தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.
16. கரு. முத்து. அழகப்பசெட்டியார், ஆத்திக்காடு தெற்கூர்.
17. பஞ்சாக்கரபுரம், வாலையானந்தசுவாமிகள், சித்தாந்தநிலையம், கொரடாச்சேரி.
18. இலக்குமண ஞானதேசிகர், வேதாந்த மடாலயாதிபதி, காளையார்கோவில்.
19. சென்னிமலை, சிவஸ்ரீ ஈசானசிவாகம ஈா. சிவசுப்பிரமணிய சிவாசாரியார், மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலைப் போதகாசிரியர், சிதம்பரம்.
20. சித்தாந்த சைவப்பிரசாரகர், தே. பெரியசாமிபிள்ளை, திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீன வித்துவான், உறையூர்.
21. பஞ்சாக்கரபுரம், வாலையானந்தசுவாமிகள், சித்தாந்தநிலையம், கொரடாச்சேரி.
22. சென்னை சைவசித்தாந்தசபைக் காரியதரிசியும், 'சித்தாந்தம்' பத்திராசிரியரும், உயர்தரநீதிமன்ற வழக்கறிஞருமாகிய ம. பாலசுப்பிரமணிய முதலியார் B. A. B. L.
23. மகாவித்துவசிரோமணி வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியார், அமராவதிபுதூர்.
24. ஸ்தலபுராணிகர், சுந்தரசாஸ்திரியார், ஆளுடையார்கோயில்.
25. பண்டித, அ. கோபாலையர், திருச் சிக்கலுக்கணித்தான ஆலங்குடி.
26. சச்சிதானந்த ஞானதேசிகர், சித்தாந்த வித்தியர்சாலை திருத்தென்குடித்திட்டை.
27. ,, ,, ,,
28. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூர்.
29. இராம. கோவிந்தசாமி பிள்ளை, அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திருவையாறு.
30. சு. மு. மகாதேவமுருகப்ப செட்டியார், கோாகர்.

வந்தனமும் வாழ்த்தும்.

அங்கிங்கெனாதபடி யெங்கும் நிறைந்திருக்கின்ற இறைவன் திருவருளுக்கும், மங்கலம் புணர்ந்த சங்கந்தழீஇய நங்குலத் தாயெனும் நற்றமிழ்த் தெய்வத்திற்கும், தெய்வத்தன்மையைத் தெளிவுற விளக்கிச் சைவம் நிறுவிய சமயாசாரியர்கட்கும், சந்தானுசாரியர்கட்கும், தன்னுயிர்போல னுயிர் காத்து இந்நிலம் புரக்கும் மன்னர் பெருமானுக்கும், பேரவை தன்னிற் பெருமைசேர் தலைமையைச் சீர்பெற வகித்த சிரியோர் தமக்கும், பன்னூலாய்ந்து மன்னிய பொருண்மொழி செந்நாப்புலமைத் திறனுடையோர்க்கும், இங்கிதமான இன்னிசைப் பாக்களைச் சங்கத்திற் பாடிய தக்கோர் பலர்க்கும், வித்தையில் பயில்பவர் புத்தியின் கூர்மையை யுத்தியினளந்தறி வித்வமணிகட்கும், வித்தியாசாலை, புத்தகசாலை, சங்கம், இவற்றின் வளர்ச்சிக்காக எவ்வாற்றானும் எவ்வளவேனும் அன்போடுவந்துதவுகின்ற அறிவாளர்கட்கும் என்றும்மாறாத நன்றியறிதலும் மனமார்ந்த வந்தனமுமளிக்கின்றோம்.

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கப் பிறையணி பெருமான் நிறையருள் புரிவாராக.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

விசு—சித்திரை
௧௨
திருத்தென்குடித்திட்டை.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
மணிவாசக சங்கத்தினர்.

விஷயமட்டும் ஆற்ருெணு அணங்குசெய்வதாயிருந்தது. அதுதான் நாயகரது பிரிவு. "வாரணவாசி ஆரணமுதல்வ! உனது சிரணவிய சேவடி சேவிக்க என் காரணவிய கண்மணியன்னர் வந்துள்ளார். உன் பூரணகிருபை பாலித்து சீக்கிரம் அனுப்பிவைப்பாயாக" என்று அவள் தியானித்தமைவள். அன்றியும் குழந்தை முகங் காணுங் குலமகட்குக் கொண்கன் பிரிவுத்துயர் சாந்தமடைவது மியல்பன்றோ? கௌரியும் அப்படியே தன் பச்சிளங் குழவியின் பால்வீசுங் கனிவாயைப் பார்த்துப்பார்த்து மகிழ்கூர்வாளாயினள்.

இங்ஙனஞ் சிலகாலங் கழிந்தது. ஒருநாள் மற்றை இருபத்து மூன்று குடும்பத்தார்களும் வாமதேவரது அநுபவத்திலிருந்த மானியப்பகுதியைத் தம்மநுபவத்தி லெடுத்துக்கொள்ள விரும்பி ஆலோசித்தார்கள். "காசியாத்திரை சென்ற வாமதேவர் இத்துணைக்காலமுந் திரும்பிவராமையால் இறந்துவிட்டாரென்பதே நிச்சயம். அன்றியும் கௌரி தானமென்றும் தருமமென்றும் பணவிரயஞ் செய்வதைக்கண்டால் அவளுக்கும் அந்நிச்சயமே யுண்டென்று யூகிக்கலாம்" என்று அவர்கள் தீர்மானித்து அவ் வாண்டுவிளைவைத்தாங்களே எடுத்துக்கொண்டுவிட்டார்கள். கௌரி அதையறிந்து துணுக்குற்று அவர்களையண்மி "ஐயன்மீர்! தாங்கள் இவ்வாறு செய்யக் காரணமென்ன?" என நாணி வினவினள். அவர்கள் அவளைப் பார்த்து "வாமதேவர் இறந்துபட்டார். நீயோபெண். அச்சொத்துக்கு உரியளல்லை. உனக்கும் உன் குழந்தைக்கும் வேண்டிய அவசிய செலவுக்குமட்டும் அவ் வப்போது பணந்தருவோம். உன்சேய் வயதெய்தியதும் அவனுக்கு அப்பகுதி திருப்பிக் கொடுக்கப்படும். நீசெய்யும் வீண்விரயம் சகிக்க முடியாதது. மேலும் நீஉன்நாயகரது மரணத்தை யறிந்தும் அமங்கிலி யாகாதிருப்பது பெரியதோர்குற்றம். ஆகலின் எங்கள் கண்முன் நில்லாதே. அகலநட" எனவெருட்டி யனுப்பிவிட்டார்கள். ஆடவர் முகம்பார்த்து அவ்வொருவினவும் நிகழ்த்த நாணிய அந்நங்கை மேலுமேலும் அவரோடு விவகரிக்க எப்படி மனந்துணிவாள்? ஆகலின் சிவசிவ என்று செங்கரத்தால் செவிபொத்தி அச் சேயிழை வீடுவந்தனள்.

வழக்கம்போல் அன்றுமாலையிலும் கொன்றை வேணியன் கோயில் சென்று அவனைக்குர்பிடுங்கால் அவள் "செக்கரஞ்சடை

மூடிச் சிவபெருமானே! மைக்கருங்குழலுமை மகிழ்மணவாளா! யாத்திரைபோன என் மணாளர் இன்னுந்திரும்பிலர். அவரது திருமேனி நலன் எப்படி யிருக்கிறதோ? நாயேன் அறியக்கூடவில்லை. அவர் மரணமெய்தினரென்று எல்லாருஞ் சொல்லி அவருக்குரிய மானிய நிலங்களின் விளைவை அபகரித்துக் கொண்டனர். இன்னும் மாங்கலிய சூத்திரம் அணிந்திருக்கிறாயே யென்று என்னை அவர் ஏனைஸி எள்ளுகின்றனர். அதை நானெப்படிச் சகிப்பேன். என் காதலர் செல்வத்தைக்கொண்டு ஆ, கடவுளே! உன்னையே சிங்காரித்தேன். உன்னடியவரையே உண்பித்தேன். எற்றோரை முகம் பார்த்ததும் விருந்தினரை யுபசரித்ததும் ஒக்கலை வளர்ந்ததும் உன்னாணை வழிநின்ற என்னாயகர் கட்டளையல்லவா? அங்ஙனமாக நாயேன் செய்த செலவு எப்படி வீண் விரயமாகும்? நிற்க நீயோ என் ஆன்ம நாயகன். காசிக்கேகிய என்னேசரோ என் சரீர நாயகர். அடியேன் உன்னிடத்திலும் அவரிடத்திலுமே கையேந்தி நிற்பேன். அவர் பங்கையபகரித்தாரது கையையும் எதிர்பார்க்க என்னெஞ்சு ஒருப்படாது. ஆகையால்நாளையுணவை நீயே தரல் வேண்டும். அல்லது என்னாயகர் நாளையே வரல் வேண்டும். இவ்விரண்டி லொன்று நாளை நிகழாதாயின் என்னுயிர் நீங்கும். ஈசா! இது சத்தியம்" என்றழுதுவிட்டு வீடுவந்து இரவிற் சயனித்துக் கொண்டாள். அவளான்மா கனவுடற் புக்கது. மாதொருபாகர் வேதியராய் அவள்முன் தோன்றிக் "கௌரி! கவலாதே. நாளை எல்லாம் சரியாய் நடக்கும்" என்றருளி மறைந்தனர். அத்தையல் திடுக்கிட்டெழுந்து கடுக்கண்டனருளை யுன்னி மீண்டும் படுத்துக்கொண்டாள். கொடியில் விடிவுமாயிற்று. கௌரியு மெழுந்து காரியம் பார்க்கலானாள்.

அன்று சிதமதிச் செல்வனார் தமியற்கை யுருக்கரந்து வாமதேவரே போன்று வடிவெடுத்துத் திருவையாற்று வீதிவழிச் சென்று ஆண்டுள்ளதோர் சத்திரம் புக்கிருந்தனர். சிறிது பொழுதிற்கெல்லாம் வாமதேவரும் அவண்போந்து புக்கனர். என்னே! ஈருருவும் ஒன்றாயிருந்த வியப்பு! சத்திரத்துள்ளாருஞ் சமீபத்துள்ளாரும் பெருந்திரளாகக் கூடி அவ்விருவரையுங் கண்டுகண்டு மூக்கின்மேற் கைவைத்தனர். கொஞ்சநேரத்தில் அவ்விஷயம் ஊர் முழுதும் பரவியது. அப்பூற் சத்திரத்திற் கூடிய கூட்டத்தில்

எள்விழ இடமில்லை. சத்திராதிபதி வாமதேவர் குடும்பத்தை நன்கறிந்தவனாதலால் கௌரியம்மைக்குச் செய்தி சொல்லி ஆள்விட்டான். அவளும் வந்து இருவரையுங் கண்டு நாணத்தால் தலைகுனிந்தாள். இருவரும் அவள் நலத்தையும் குழந்தையின் சீரையும் விசாரித்தார்கள். தன் கணவரைக் கண்டுகொள்ள வலியற்று அவள் நின்ற நிலை பரிதாபகரமாயிருந்தது. இந்தச் சமயத்தில் இருபத்துமூன்று குடும்பத்து ஆதிசைவரும் அங்கு வந்துவிட்டார்கள். அவர்களாலும் உண்மை வாமதேவரை யறியமுடியாமற் போயிற்று. கறைக்கண்டன் மாயையை அவனருளின்றி எவரே கடக்கவல்லார்?

வாமதேவராய் வந்த காமதகனர் அப்பெருங் கூட்டத்தில் திடீரென மறைந்தார். மறைந்தவர் அசரீரியாய் நின்று அனைவர் காதிலும் விழும்படி "ஏ சிவத்துவிஜர்காள்! திருவையாற்றுச் செம்பொற்கோயிலில் மருவிய சிவன்யாம். கௌரியிடம் நீங்கள் நடந்துகொண்டது அருவருக்கத் தக்கது. யாம் இந்த லீலை செய்யாதிருந்தால் அவ்வுத்தமி இன்றே மாண்டிருப்பாள். காசி யாத்திரை சென்ற வாமதேவர்க்குக் கைகண்ட பலன் அப்படியாவிருக்க வேண்டும்? இப்போது உங்கள் முன்னிற்பவரே உண்மை வாமதேவர். அவர் மானியப்பகுதியை இந்நிமிடமே அவரிடங் கொடுங்கள். நீங்கள் ஆற்றிய அடாமைக்கு அவரிடம் மன்னிப்பு வேண்டுங்கள். ஏ கௌரீ! உனது பாதிவிரத்தியமும் சிவபாத சேவையும் பகிரங்கமாக வேண்டுமென்ற எமது சங்கற்பமே அவ்வாதிசைவர்களால் நிறைவேறியதாகக் கொள். நெஞ்சிற் கொஞ்சமும் சஞ்சலம் வேண்டாம். நீயும் வாமதேவருங் குழந்தையுடன் சுகமாக விருந்து வேதாசாரத்தை விடாது நடத்தி உலகுக்கொரு காட்டாய் விளங்குங்கள்" என்றருளினார். பண்சுமக்கும் பார்வதிநாதர் மதுரையில் அற்றைஞான்று மண்சுமக்கும் மள்ளராய் வந்த நினைவையும் இந்நிகழ்ச்சி அக்கூட்டத்தார்க்கு ஊட்டிவிட்டது. ஆகலின் அவர்கள் அரகர முழக்கஞ்செய்து ஆரவாரித்தார்கள். இருபத்து மூன்று ஆதிசைவக் குடும்பத்தினரும் வாமதேவரிடம் மன்னிப்பு வேண்டிப்பெற்று அவரோடு நேசமாயினர். வாமதேவர்க்குத் தம்முரிமை கிடைக்கலாயிற்று. கௌரியின் புகழ் கடலினும் பரந்தது.

9. கீர்த்தி.

முன்னொரு காலத்தில் பரதகண்டத்தில் பிரியவிரதன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் நீதிக்கு மனு. வண்மைக்குக் கன்னன். வாய்மைக்கு அரிச்சந்திரன். வலிமைக்கு வீமன். வீரத்திற்கு விசயன். கல்விக்கு வியாழன். சிவநேசத்துக்குத் திருநீற்றுச் சோழர். அன்ன மகிமைகளையுடைய அவனுக்குக் கீர்த்தி யென்றொரு மனைவியிருந்தாள். அப்பெயருக்கேற்ப நல்ல குணங்களின் வடிவமாகவே அவளும் விளங்கினாள். இருவரும் இல்லறம் இனிது நடாத்தி வருங்காலத்தில் அவருக்கிருந்த குறை மகப்பேறின்மை யொன்றுதான். ஆகலின் பிரியவிரதன் கீர்த்தியின் அநுமதிபெற்றுப் பிரபை யெனப் பெயரிய வேறொருத்தியை இரண்டாமனைவியாகக் கொண்டான். பிரபை இளமையும் எழிலும் இயைந்து விளங்கினாள். இருண்ட சுருண்ட குழல், இளம் பிறை போன்ற நுதல், நீண்டு அரிபரந்த நேத்திரம், முறுவல் பூத்த முகம், மயூரமன்னசாயல், அன்னமன்ன மென்னடை ஆகிய இன்னவியல்புடைய பிரபை பிரிய விரதனுடன், விளக்குடன் பிரபை யிருப்பதுபோல் வேற்றுமையின்றிவாழ்ந்துவந்தாள். வெகு சீக்கிரத்தில் அவள் வயிற்றில் ஒரு பிள்ளையும் பிறந்தான். என்னே! அவ்விருவருமடைந்த அளவிலாப் பெருமிதம். அவனுக்கு அவர்கள் இட்டு மகிழ்ந்த பெயர் பதுமநாபன் என்பது. அவன் மேனி பொன் னுருக்கி வார்த்ததுபோலிருந்தது. கொண்டையிற் கட்டிய பொற்சுட்டி இலங்கியது. நெற்றியிலிட்ட நீறு நிலாக் கான்றது. கனிவாயினூறிய தேறல் மார்பில் வழிந்தோடியது. காதிற் புனைந்த குழையின் செம்மணி இளவெயில் வீசியது. வாயில் இளநகை விளங்கியது. அரையிற் பொன்னாண் மின்னிட்டது. அன்னையும் அத்தனும் அருமந்த நாபனை மாறிமாறி அள்ளி யெடுப்பதும், கிள்ளி முத்துவதும், நெஞ்சோடணைப்பதும், கொஞ்சி மகிழ்வதும்,உச்சிமோப்பதும், விலாவிலுங் கழுத்திலும் விரல்வைத்தழுத்திச் சிரிப்புண்டாக்குவதுமாயிருந்தனர். பையலின் அழகு வடிவால் பெற்றோரின்மையற்பிணிப்பு முன்னையினும் பன்மடங்கு இறுகிவிட்டது.

இஃதிவ்வாறாகக், கோப்பெருந் தேவியாகிய கீர்த்தியின் கவனம் பிரியவிரதனுக்கு அநேகமாய் இல்லாமற் போய்விட்ட

தென்றே சொல்லலாம். பிரபை அவளைப்பகைக்கத்தொடங்கினாள். கீர்த்திக்குக் கணவன் கம்பீர முகத்தைக் கண்ணெடுத்துப் பார்த்தலுங் கிடைத்தற்கரியதாயிற்று. என்ன செய்வாள்? அவள் தன் ஆசையெல்லாம் ஒடுங்கப்பெற்றுக் கணவனுக்குக் கயிங்கரியமாயினுஞ்செய்து மகிழலாமென உறுதிசெய்து சமயம் வாய்த்தபோதெல்லாம் அவனுக்குவேண்டுஞ் சிறுபணிகளாற்றிப் பொழுது கழிப்பாளாயினாள். ஒருநாள் விரதனும் பிரபையும் ஒரு சிங்கார அறையில் அலங்கார மஞ்சத்தி லுட்கார்ந்து ஆனந்தமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். பதுமநாபன் சிறிதுபொழுது தாய் மடியிலுஞ் சிறிதுபொழுது தந்தை மடியிலுமாக மாறி மாறி யிருந்து விளையாடி அவர்களது காதற் கடிதம்போல் வயங்கினான். அந்தச் சமயத்திற் கீர்த்திதேவி தன்மணாளன் பணிப்பொருட்டு அவ்வறையிற் புக்கனள். ஆனால் விரதனும் பிரபையும் உள்ளிருந்தது அவளுக்குத் தெரியாது. கீர்த்தி பிரவேசித்ததும் பிரபைக்கு வந்துவிட்டது கோபம். அவள் சரேலென்று கட்டிலைவிட்டிறங்கி வந்து கீர்த்தியைக் காலால் எட்டியுதைத்து உருட்டினாள். பிறகு அவள் உருண்டு கிடப்பவளை உறுத்துநோக்கி “அடீ! துஷ்டை! உனக்கு வெட்கமில்லையா? நாங்களிருப்பதை நீ யறிந்து இங்கு வந்துளாய். நீ பட்டத்தரசியாயிருந்தால் யாருக்கென்ன? நீயோ மலடி. கணவன் குடும்பத்தை விருத்திசெய்யும் பாக்கிய மற்றவள் பதிப்ரீதியுடையளாதல் எங்ஙனம்? வந்திக்கு யாண்டும் வந்தனை யில்லை. நிந்தனையே யுரியது. அவள் தன்கொழுநனது வமிசத்தை வழியடைக்குங்கல். ஆகலின் நீ எழுந்தோடி வெளியிற்போ. இனி இவ்விடத்துக்கு வந்தால் இன்னுங்கொடிய மானக்கேடு அடைவாய்” என்று கண்டபடி திட்டித் துரத்திவிட்டாள். பிரிய விரதன் பிரபையைத் தடை செய்யாமலும் கீர்த்தியைச் சமாதானப் படுத்தாமலும் கற்சிலைபோற் சும்மாவிருந்துவிட்டான். தையலார் மையலிற்பட்டோர் தம்பெருமையை யிழக்கவுமாட்டாரோ?

கீர்த்தி வெளியே துரத்தப்பட்டுத் தன்னிருக்கை சேர்ந்து அழுதாள், விழுந்தாள், அரற்றினாள். பாவம். பிரபை கொடுத்த உதை அவளுடம்பை நோவுறுத்தியது. சரமாரியாய்ப் பொழிந்த நிந்தைகள் சிந்தையைப் பிளந்தன. கணவன் காட்டிய வன்கண்மை அவளுயிரையே வதக்கிவிட்டது. கண்ணாடி போன்ற கன்னத்திற்

கண்ணீரை முத்து முத்தாயுதிர்த்துக் கொண்டு அப்பெண்பெரியாள்
"பெண்ணொன்றுற் பேயுமிரங்கு மென்பர். பிரபை எனக்கே
னிரங்கிலள்? நான் அவளுக்கு மறந்துங்கேடுசூழ்ந்திலேன். என்
னாயகர் அவள் மையலிற் சிக்கி என்னைப் புறக்கணித்திருப்பதும்
என்பொல்லா வினையென்றே நான் அமைவேன். அவளை நான்
மனத்திலுங் கடிந்தது கிடையாது. மணாளர்க்குப் பணிபுரியுஞ்
சந்தர்ப்பமாயினும் அவ்வப்போது கிடைத்து வந்ததே பெரும்
பாக்கியமாயிருந்தது. இனி அதுவும் போயிற்று. மன்னர்
மன்னன் வயிற்றிற் பிறந்து மன்னர் மன்னனுக்கு மாலையிட்டும்
பாவியேன் உதைவாங்கவும் நிந்தைகேட்கவுமே உயிர் வாழ்ந்தேன்
கணவனருளில்லாத காரிகை உயிர் தரிக்கின் அவைகளை கண்ட
பலன். நாளைப்பொழுது விடிவதற்குள் நான் நான்றுகொண்டே
னும் வரையுருண்டேனும் விடமயின்றேனும் உயிர்நீத்து மானங்
காப்பேன்" என்று தனக்குள் தீர்மானஞ் செய்துகொண்டாள்.

சிறிதுபொழுதில், புங்கவரொருவர் அம்மங்கையினிருக்கைக்கு
வந்தனர். அவள் அம்முனிவரது கருணைபொழிதிருமுகத்தையும்
திருநீற்றுநுதலையும், கனிந்தவாயழகையும், பெருமை தருதுறவை
யும், பொறையுளத்தையும், பிஞ்ஞகனார் மலர்த்தாள்கள் பிரியாத
மனத்தையும் தரிசித்தமாத்திரத்தில் தன்துயரமெல்லாம்விண்டவள்
போலானாள். அப்பால் அவர்க்கடி பணிந்து அழுதளித்து அயற்
புறத்தொதுங்கி நின்ற அவ்வம்மையை அத்தபோதனர் கடைக்
கணித்து "அம்மா! அடுத்தது காட்டும் பளிங்கு. அப்படியே உன்
னெஞ்சம் கடுத்ததை உன்முகங் காட்டுகின்றது. நீ எல்லையற்ற
துயரத்தீயாற் சுடப்பட்டிருக்கின்றாய். உன் உயிரை நீ வெறுத்து
நிற்பதையும் நாமறிவோம். நீ மயங்கவேண்டாம். உயிர்க்கு உறு
கண் செய்து கொள்ளாதே. உனது துக்க நிவிர்த்திக்கும் சுகப்
ராப்திக்கும் உரிய நல்ல காலம் சமீபித்துவிட்டது. ஆனால் நீ அது
வரையும் செய்யவேண்டுவதொன்றுண்டு. அஃதுரைப்போங்கேள்.
எல்லாமக்களும் விக்கினமுடையார். அதனை நீக்கியருள வல்லார்
ஸ்ரீ விநாயகப்பெருமானொருவரே. ஆகையாற்றான் அப்பிரபுவுக்கு
விக்நராஜா என்ற பெயருமுண்டு. தம்மை வழிபட்டார்க்கு விக்கி
னங்களைப்போக்கலும் வழிபடார்க்கு அவற்றை ஆக்கலும் அவரது
அருளுப்பாடு. இன்னும் அவர் சர்வதேவர்களுக்கும் நாயகராக

வின் விநாயகரெனவும் பட்டார். அப்பெருமானுரை நீ சரணமடை. அவருபாசனையால் உன் கவலை யெல்லாம் வெங்கதிர்கண்ட தண் பனிபோற் சடுதியில் மறையும். உனக்கு இன்பமும் பெருகும்" என்று வரமருளி அவளுக்கு அவ்வுபாசனுவிதிகளையும்உபதேசித்துப் போய்விட்டார். கீர்த்தித்தாய் கருந்தனமிழந்தவன் அதனை மீளப் பெற்றது போலக் கரையற்ற மகிழ்ச்சிகொண்டு தற்கொலைத் தீர் மானத்தைக் கைவிட்டுக் கண்ணுதற் பெம்மான் புண்ணிய மகனர் பூசைக்குச் சித்தமாயினுள்.

கீர்த்தியின் மாளிகைக்கருகில் மந்தார மரமொன்று நந்தாத நிழல் செய்ய ஆண்டு மூத்தபிள்ளையார் ஒருகோடும் இருசெவியும் மும்மதமும் நால்வாயும் ஐங்கரமும் விளங்கத் திருக்கோயில் கொண்டிருந்தார். கீர்த்தி அவரையே தனது உபாசனுமூர்த்தி யாகக் கொண்டாள். தோழியர் நாடோறுந் தவருமல் அறுகு முதலியன எடுத்துவருவர். அரசி விடியலில் எழுந்து முழுக்கு முதலியன முடித்து முழுநீறு பூசிப் பூசைக்கோலங் கொள்வாள். அறுகு முதலியன குறிப்பிட்டநேரத்தில் வந்துசேரும். கோப் பெருந்தேவி மாபெருந்தேவர் முன் உட்கார்ந்து அவரை நியமந் தவருது அறுகுகொண்டருச்சித்துப் பிறகு எழுந்து நின்று கைகள் தலைமேற்குவியக் கண்கள் வெள்ளம் பொழிய மெய்யும் மயிர் பொடிப்பக் குரலுந் தழுதழுப்ப ஆநந்த பரவசத்தளாய்,

"ஐயா மறைமுடிவுந் தோாத வானந்த
மெய்யா பிரணவத்தி னுட்பொருளே வேழமுகக்
கையாய் வெளியாய் கரியானே பொன்மையாய்
செய்யாய் பசியாய் பெருங்கருணைத் தெய்வமே.

சூா னுயிருண்டு சுரருலகங் காத்தளித்த
வீரனுக்கு முன்பிறந்த வித்தகா முப்புரமுஞ்
சேர வுருத்த திருவாள னீன்றெடுத்த
வாரணமே யெந்தாய் வலம்புரிக் குஞ்சரமே.

பண்ணியமும் வெண்கோடும் பாசாங் குசப்படையு
நண்ணியசெங் கைத்தலத்து நாதா வொருகோட்டுத்
தண்ணிய வெண்பிறைத் தாழ்சடையாய் மெய்யடியா
ரெண்ணிய வெண்ணியாங் கீந்தருளும் வள்ளலே"

என்று தோத்தரிப்பாள். பின்னர் அவள் இருக்கைபுக்கு உவ வருந்துவாள். இந்தவிதமாக அவள் வாழ்வு சிலமாதங்களாக கழிந்து வரும்போது ஒருநாள் தோழியர் எங்கெங்குச் சென்றும் பூசைக்கு அறுகு அகப்பட்டிலது. ராணிக்குக் கோபம் வருமே யென்செய்வோமென அவர்கள் அஞ்சினர்கள். கடைசியாக அவர்கள் அறுகுக்குப் பிரதியாக வன்னிப்பத்திரம் பறித்துக் கொண்டுபோய் அரசி முன் வைத்து "அம்மணி! இன்று அறுகு கிடைக்கவில்லை. வன்னிப்பத்திரங் கொணர்ந்தோம். இன்று மட்டும் இறைவனுரை இதனுல் அர்ச்சியுங்கள். நாளை நாங்கள் வேறு திசைக்கேகி அறுகுஎடுத்து வருகோம்" என விண்ணப்பித்தார்கள். கீர்த்தி வேறுவழியில்லாமையால் அவ்வாறே அண்ணலார்க்கு ஆராதனை இயற்றி அறுகருச்சனை செய்யாததோடம் நீங்க அன்று முழுவதும் உணவொழிந்திருந்தனள். இரவும்வந்தது. அவளும்உறக் கங்கொண்டாள். மூன்று யாமங்கள் கழிந்தன. நாலாம் யாமத்தில் அவள் கனவொன்று கண்டாள். அப்போது விக்நராஜா பிரசந்ந ராஞர். அவர் தமது அருள் கொழிக்குங் கண்களால் அவளைப் பார்த்து "அம்மே! உனது பெய்யன்புக்குவந்தேம். நீ சிந்தை கூரன்பிற் சாத்திய வன்னியிலையை இதோ என் சென்னியிற்பார். வேண்டும் வரங்களை ஈண்டே விஞவுதி" என்ருர். பட்டத்தரசி உமாசுதரது பாதமத்மங்களிற் பதியவைத்த தனது நேத்ரபத்மங் களை வாங்காமல் குனிந்ததலை குனிந்தபடி நின்ருளேயன்றி வர மொன்றுங்கேட்க வாயெழாதவளாயினள். வலியவருளும் வள்ள லாராகிய பிள்ளையார் "கீர்த்தி! உன் மாற்ருள் செய்த வஞ்சனை சகிக்கமுடியாததுதான். பிரியவிரதன் உன்னிடம் மிகவும் பிரிய முடைவான். விரைவில் நன்மகனெருவன் உன் வயிற்றிற் சனிப் பான். கிப்ரப்பிரசாதனென்று அவனுக்குப்பெயரிடு. உன்மாற் ருள் நோயுற்று அழுகிழப்பள். உன்மகன் நாலாயாண்டெய்தியதும் அவள் அவனுக்கு நஞ்சூட்டுவள். நீ அப்போது பயந்துவிடாதே. அவனைக் கிருச்மதர் என்னும் முனிவரிடம் எடுத்துக்கொண்டுபோ. அவர் அவனுக்கு உயிரளிப்பார்" என்று அவளுக்கு அநுக்கிரகித்து அந்தர்த்தானமாயினர். பிள்ளைமனம்படைத்தபெருமாட்டி உடனே விழித்தெழுந்து 'எம்பெருமானரின் அருளிருந்தவாறிது' என் றெண்ணினள். விண்ணிற் பொழுது விடிந்தது.

செய்தித் திரட்டு.

தருமபுரம்:— இவ்வாதீனச் சார்பில் சைவ சமயப் பிரசாரகர் இருவரை நியமித்து மகோற்சவ காலங்களிலும், மற்றைக் காலங்களிலும் சைவ சமய உண்மைகளை எடுத்து விளக்கி வரவும், அப்பிரசாரகர்களைக்கொண்டு பிரசங்கம் செய்விக்க விரும்புவோர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்முன் அனுமதியின் பேரில் வரவழைத்துக் கொள்ளவும், தேவாரபாடசாலையமைத்து மாணவர்கட்கு உண்டி, உடை, உறையுளாகிய உதவியீந்தவாரமும் இயல் இசையாதியனவும் வடமொழியும் ஆங்கிலமும் ஐந்து வருடங்களிற் பயிற்றுவிக்கவும் திருத்தல வரலாறுகளையும் திருப்பதிகங்களையும் அச்சிட்டு இலவசமாக வழங்கவும் செய்திருக்கும் திட்டங்கள் சைவ வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் மிக்க ஏற்றபெற்றித்தா மெனப்போற்றுகின்றோம்.

தருமபுரம் ஆதீனச் சார்பில் திருவாரூர் தியாகராச சுவாமி கோயிலில் பங்குனி ௨௨௳ கண்ணப்பர், வன்றொண்டர் என்னும் விரிவுரைகளும் திருமழபாடி சிவாலய முகப்பில் பங்குனி ௧௮௳ 'ஸ்ரீநந்திதேவர் திருக்கல்யாணம்' என்பதுபற்றியும், புள்ளிருக்குவேளூர் வைத்தியநாத சுவாமி சந்நிதிமண்டபத்தில் சண்முக விலாச பிரசாரசபையில் பங்குனி ௨௫௳ ஐந்தாந்திருவிழாவன்று 'சிவசாதனம்', 'ஆலய வழிபாடு' என்னும் விரிவுரைகளும் ௨௮௳ சமய வாழ்க்கை, தீர்த்தமகிமை என்னும் விரிவுரைகளும்; திருபுவனம் கம்பகரேசுவரர்திருவிழா 5-ம்நாளாகிய பங்குனி௨௯௳ அப்பர் அருள், திருமுறைப்பெருமை யென்னும் விரிவுரைகளும்; ௭-ஆம் திருவிழாவாகிய ௨௫௳ திருக்கல்யாணச் சிறப்பு, நமது கடமை என்னும் விரிவுரைகளும் சிறப்பாகச் செய்விக்கப்பெற்றன.

காரைக்குடி:— ஸ்ரீ வேணுகோபால சுவாமி பிரமோற்சவம் பங்குனி ௨௪௳ தொடங்கி இசையரங்கு ஆதிய சிறப்புக்களுடன் சித்திரை ௫௳ நிறைவேறியது.

கோயிலூர்:—பங்குனி உத்தரநாள் முத்துராமலிங்க ஞானதேசிகர் ஆகிய ஆண்டவர் குருபூசை வழக்கம்போல் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

திருவையாறு:— அறம்வளர்த்த நாயகி சமேத ஐயாறப்பரின் பெருவிழா சித்திரை ௧௮௳ தொடங்கி நடைபெறுகிறது. ௨௯௳ ஏழூர்ச் சுற்றுவிழாவுடன் ௫௯௳ வரை வழக்கம்போல் சிறப்பாக நடைபெற்று நிறைவேறும். எட்டாம் திருவிழாவரை பலபேரறிஞர்களால் நாடோறும் இரண்டு விரிவுரைகள் நடைபெறும்.

நேமத்தான்பட்டி:— திருநாவுக்கரசு வித்தியாசாலையின் ௧௫— வது ஆண்டுவிழா சித்திரை ௧0௳ பண்டிதமணியவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. இவ்வித்தியாசாலையின் வளர்ச்சியை அறிக்கை மிகத் தெளிவாக விளக்குகிறது. உயர்திரு, மகாதேவஞானதேசிகர் ஆதிய பெரியார் பலர் இதனைப்பாராட்டி வாழ்த்தியும் புகழ்ந்தும் உள்ளார்கள்.

சீகாழி:— ஆளுடைய பிள்ளையார் திருமுலைப்பாலுண்ட திருவிழா இன்று நடைபெறும்.

சிவநேசன்.

காஞ்சிபுரம்:— மெய்கண்டார் கழகச்சார்பில் சித்திரை அஉ உரோம சரேசர் சிகண்டீசர் திருக்கோயில்களில் வழிபாடும் பரஞ்சோதியம்மை கோவிலில் பாண்டவேசப் படலப்பொருள்பற்றி புலிசை ஸ்ரீமத்ஞானியார் சுவாமியவர்களின் விரிவுரையும், கூஉ முத்தீசர் திருக்கோயில் வழிபாடும் திருநாவுக்கரசு நாயனார் என்பதுபற்றி ஞானியார் சுவாமிகளின் விரிவுரையும், செய்யப்பெற்றன.

வழக்கறுத்தீசர் ஆலயத்தில் ஸ்ரீஞானியார் சங்கத்தில் சண்முக புத்தகசாலை வளர்ச்சி வேட்கைத்திருமுக மொன்று ஸ்ரீஞானியார் சங்கத்தலைவர் திரு. அ. சோ. வச்சிரவேல் செட்டியாரவர்கள் தந்துள்ளார்கள். அதில் குறிப்பிட்ட திருமுறைக்கோயில் பெருமையை அடுத்தசிவநேசனில் வெளியிடுவோம். இப்புத்தகசாலைக்கு அன்பர் பலரும் வேண்டுவன உதவி இதனை வளர்த்தல் இன்றியமையாததாகும்.

சுவாமிமலை:— ஸ்ரீசுவாமிநாத சுவாமிக்கு கங்காதீர்த்த மகாருத்திர மகாபிடேகம் முன் குறிப்பிட்ட தேதியில் நடத்தக்கங்கைவாத்தாழ்த்தது. இப்போது வந்து விட்டதால் சித்திரை உயஉ தொடங்கி 11 தினம் வரை 121 வைதீகர்களைக் கொண்டு மகந்நியாச ஜெபம் செய்து கூயஉ 121 குடம் கங்கா தீர்த்தாபிடேகம் செய்விக்கப்பெறும் என பழநிச்சிவனார் பத்திரிகை வழங்கி யுள்ளார்கள்.

கவிமேடு:— இவ்வூர் வாசிகள் சித்திரை கூஉ ஆளுடைய அரசு திருநாட் சிறப்புக் கொண்டாடிக் குருபூசை செய்து ஆயிரக்கணக்கான மக்கட்கு அன்னம் அளித்து திரு. T. S. கல்யாண சுந்தரம்பிள்ளையவர்கள் தலைமையில் அப்பர்அவை கூட்டி விரிவுரைகள் ஆற்றுவித்து அப்பர்சுவாமிகளைப் புஷ்பவிமானத்தில் திருவுலாப்போந்தருளவும் செய்தனர்.

திருக்குடந்தை:- ஸ்ரீமௌனானந்த பரமசற்குருநாத சுவாமிகளின் 42 வது குருபூசை சித்திரை உரு உத்தராகான் நடைபெறும். அன்றிரவு திருவுருவப்படத் திருவுலாக்காட்சியும் 3 நாட்கள்வரை மாகேசுவர பூசையும் இசையரங்கும் நடைபெறும்.

திருக்களர்:—ஸ்ரீஅமுதவல்லியம்மை சமேத பாரிசாதவனே சுவரருக்குப் பெருவிழா சித்திரை கசுஉதொடங்கி நடைபெறுகிறது. உகூஉ நிறைவேறும்.

ஆத்தன்குடி:— ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரருக்கு சித்திரை ககூஉயாகிய இன்று பெருவிழாத் தொடங்கி உஅஉ தீர்த்தவாரியுடன் சிறப்பாக நிறைவேறும் என ஆத்தன்குடி தனவணிக நகரத்தார்கள் திருமுகம் வழங்கியுள்ளார்கள்.

திண்டுக்கல்:— ஸ்ரீ அபிராமியம்மை சமேத பத்மகிரீஸ்வர சுவாமிக்கு சித்திரை ககூஉ தொடங்கி திருவிழா நடைபெறுகிறது. உ௦உ நிறைவேறும். ஒவ்வொருநாளும் மாலைவிழாவில் தேவத்தான தேவார ஆசிரியரும் மாணவ மாணவிகளும் வெளியூர்களிலிருந்து வந்துள்ள ஓதுவாமூர்த்திகளும் புல்லாங்குழல், பிடில், மிருதங்கமாகியவைகளுடன் தேவார பாராயணஞ்செய்து வருகின்றனர்.

கீட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி
வெளியிடப்பெற்றது.